
www.tamilarangam.net

நிஜம் 1 ❋ பிரதிபலிப்பு 1 ❋ விலை 2€
14 - 02 - 2005

# விம்பங்கள்

**உண்மைகளின் பிரதிபலிப்பு மாத்திரமல்ல! பதிவும் கூட!**



தமிழத தேசிய ஆவணச சுவடிகள

www.tamilarangam.net

# துளித் துளியாய்....

ஹைக்கூ கவிதைகள்

காக்கையின் கூட்டில்
குயிலாசை
ஏமாற்றம்.

நன்றி சொன்னேன்
என்னை மனிதனாக்கிய
இடையூறுகளுக்கு.

கண்ணீரில் வளர்ந்து
கண்ணீரில் கரைந்தது
உப்பு.

எருதுக்கு வலி
காக்கைக்குப் பசி
புண்.

கடிக்க வந்த நாயை
கட்டிப் போட்டது
எலும்பு.

-கவிஞர் சின். இராசலிங்கம்.

உன்னுடன் வாழும்
ஓர் இரவு போதும்
என்றது புல்லின்
மேல் விழுந்த
பனித்துளி !

-நினா

நம்பிக்கை

வாழ்க்கை முழுதும் முட்கள்
கண்ணுக்கெட்டிய தூரம் வரை!
இருந்தும்..........
நடந்து கொண்டேயிருக்கின்றேன்!!

-சுகக்குட்டி

விழியோரத்து நீர்த்தேக்கத்தில்
வழி தவறிய வாலிபம்,
வலிகளைச் சுமந்தும்
நிமிர்ந்தே நிற்கிறது !
காலத்தை எதிர்பார்த்து,
கனவுகளைத் தேக்கி
வைத்து!!!

-யாழி

www.tamilarangam.net

# விம்பங்கள்

அன்புடன் உங்களுக்கு, வணக்கம்.

பிறந்துள்ள இந்த 2005 ஆம். ஆண்டு பிறக்கும்போதே வலியோடும் வேதனையோடும் பிறந்திருக்கின்றது.

எவ்வளவு தான் பிரச்சனைகள், துயரங்கள் இருந்தாலும், எவரும் தம்மளவில் ஓரளவு மகிழ்ச்சியோடும், எதிர்கால நம்பிக்கைகளோடும், புதிய தீர்மானங்கள், எதிர்பார்ப்புக்கள், வாழ்த்துப் பரிமாறல்கள் என, உற்சாகத்தோடு புதுவருடத்தை வரவேற்பது வழமை. ஆனால், கடந்து விட்ட 2004, காலச் சக்கரத்தினுள் மறைந்துவிடுமுன் தன்னை என்றென்றும் துயர் நினைவுகள் நிறைந்த ஆண்டாகப் பதிவு செய்து விட்டது.

சுனாமி எனும் பெயரில் எழுந்த ஆழிப்பேரலை, நீண்ட தூரம் பயணித்து ஒன்றரை லட்சம் உயிர்களைக் காவுகொண்டு விட்டது. உயிரிழந்தவர்களைவிட, அவர்களைப் பிரிந்து துடிக்கும் மற்றவர்களின் வேதனை மிகக் கொடியது. பொருள் இழப்புக்களும் மிக அதிகம். இன்னும் பல ஆண்டுகட்கும் இதன் பின்விளைவுகள் நீளத்தான் போகிறது. வாழ்விடங்கள், பாடசாலைகள், வைத்திய சாலைகள், தொழில் ஆதாரங்கள் ஆகியனவற்றை மீளக் கட்டமைத்துச் சீராக்கி, வழமை வாழ்வை மீட்டெடுக்க இன்னும் பல காலம் ஆகும்!

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக, போர் மேகங்களால் சூழப்பட்டிருந்த எமது தாயகத்தில், கடந்த இரண்டு வருடங்களாக ஓரளவாவது நிலவிய அமைதியையும், ஆனந்தத்தையும் அள்ளிச் சென்று விட்டது இச்சுனாமி. இதில் பாதிப்படைந்த எமது உறவுகளின் துயரத்தில், உணர்வோடு பங்கெடுப்பதுடன், ஓரளவாவது வேதனைகளைத் துடைத்து விட முயல்வோம்!

ஒவ்வொருவரும் எம்மால் முடிந்த அளவு, ஒரு சிறுதுளியாவது கொடுத்து எம்மவர்களின் துயர் துடைப்போம்! எமது உறவுகளின் வேதனையையும், நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டிய வேகத்தையும் மனதில் வைத்து துரிதமாகச் செயற்படுவோம்.

## இனி...

விம்பங்கள் எனும் இந்தப் பெயரும், பொருள் அடக்கங்களும் உங்கள் பார்வைக்குப் புதிதாக இருக்கும்! பிரான்ஸ் நாட்டில் HUMAN ENERGY எனும் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள எமது நிறுவனம் ஏற்கனவே உங்களுக்கு அறிமுகமானதுதான்! ஆம்! a2ztamil.com எனும் இணையத்தளத்தினூடாகவும், a2z தமிழ்ஒலி மூலமாகவும் உங்களுக்குப் பரிச்சயமான நாம், தற்பொழுது இதழியலிலும் உங்களுடன் இணைந்து, முதலாவது இதழின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வாழும் சமூகத்தை அறிந்து கொள்வதும், அறிந்து கொண்டதைப் பகிர்ந்து கொள்வதும் மட்டுமல்லாமல், திறமையுள்ள புதிய சமுதாயத்தின் படைப்புக்களுக்குக் களமாகவும் இருக்க வேண்டும் என்பதே எமது எண்ணம்!

விம்பங்கள்
உண்மைகளின் பிரதிபலிப்பு மாத்திரமல்ல
பதிலும் கூட!

மீண்டும் சந்திப்போம்! நன்றி!
ஆசிரியர்

## உள்ளடக்கம்



ஏன் எதற்கு எப்படி - சுநாமி பற்றிய ஒரு விரிவான கட்டுரை ........ 04



இலங்கைத் தீவில் அமெரிக்கப் போர்க்கப்பல்!! ஆசிய நாடுகளுக்கு அமெரிக்கா சொல்லும் செய்தி என்ன? ........ 14



ஏன் இந்த சோகம்? - சிதைவுகள் ........ 16
இளந்தளிர்கள் ........ 18
கல்லறையிலும் காற்று வரும்! - சிறுகதை ........ 19
துயரத்தில் ஓர் கவிதை ........ 21
தலைமுறை ........ 22
பார்த்தவை, படித்தவை ........ 24
கின்னஸ் உலகம் ........ 27
என்னடா பொல்லாத வாழ்க்கை ........ 29

HUMAN ENERGY S.A.R.L. (FRANCE) நிறுவனத்தின் சார்பில் வாசன் அச்சகத்தில் (LONDON) அச்சிட்டு
வெளியிடுபவர், ஆசிரியர்: சிவ. ரவி

பொறுப்பாசிரியர்: மீரா
உதவி ஆசிரியர்: இரா. திலீபன் (ஐக்கிய இராச்சியம்)
தகவல் சேகரிப்பு உதவி: சயந்தன்
பிழைதிருத்தம்: ஜீவகன்

வடிவமைப்பு: காளிதாஸ்
வடிவமைப்பு உதவி: சுகந்தன்

நிர்வாக அலுவலகம்:
HUMAN ENERGY
29 BD EDOUARD VAILLANT
93 300 AUBERVILLIERS, FRANCE

தொலைபேசி ▸ 00 33 1 43 52 93 21
தொலைநகல் ▸ 00 33 1 43 52 94 34
மின்னஞ்சல் ▸ a2znetgroup@hotmail.fr

கதைகளில் வரும் சம்பவங்களும், பெயர்களும் கற்பனையே.

www.tamilarangam.net




# ஆழிப் பேரலை (TSUNAMI)

## ஏன், எதற்கு, எப்படி

பொறுமைக்கு உதாரணமாகக் கூறப்படும் பூமி அன்னை கூட, சில வேளைகளில் இயற்கையின் சீண்டலால், சீற்றமடைகிறாள். விஞ்ஞானத்திலும், அறிவாற்றலிலும் இன்று மனிதன் எவ்வளவு தூரம் வளர்ந்து விட்டாலும், இயற்கையைப் பற்றி இன்னும் முழுமையாகத் தெரிந்து கொள்ளவில்லை என்பதே உண்மை.

நிலவில் பதித்த காலும், செவ்வாயிலிறக்கிய செயற்கைக் கோளும் என அண்டவெளியை அலசும் ஆற்றல் பெற்றாலும், மனிதன் தான் வாழும் பூமியின் சீற்றத்தைத் தடுத்து விடும் சக்தியை மட்டும் இன்னும் பெறவேயில்லை. பஞ்ச பூதங்கள் என்றழைக்கப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், இவை எம்மை வாழவைத்தாலும் அவ்வப்போது பற்பல பாதகங்களை விளைவிக்கத் தான் செய்கின்றன.


அலைக்கரத்தால் அரவணைத்து, தன் மடியிலிட்டுத் தாலாட்டி, அரணாயிருந்து, எதிரியிடமிருந்து எம்மைக் காத்த கடலன்னை, இராட்சசியாக மாறி தன் அரக்கக் கரங்களால் தென்னாசியாவின் பல பகுதிகளை வாரிச்சுருட்டித் தன் பசி ஆற்றிக்கொண்டாள். 26.12.2004 அன்று எமது தேசங்களைச் சுடு காடாக்கிய இந்தக் கோரத் தாண்டவம் ஏன் நிகழ்ந்தது. இந்தக்கடல் கொந்தளிப்பு எப்படி உருவாகின்றது என்பதை நாமும் தெரிந்து கொள்ள வேண்டாமா? இந்தக் கடற் கொந்தளிப்பினை சுநாமி (tsunami) எனும் பெயர் கொண்டு அழைத்து வருகின்றார்கள்.



நாம் வாழும் இந்தப் பூமியின் தோற்றம் பற்றித் தெரிந்துகொண்டால், சுநாமி பற்றி முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு, மிகவும் சுலபமாக இருக்கும்.

கிட்டத்தட்ட 20 கோடி ஆண்டுகளுக்கு முன்னர், பால்வெளியில் (milky way) இடம் பெற்ற ஒரு விபத்து காரணமாக, அங்கு உலா வந்து கொண்டிருந்த ஒரு பிரமாண்டமான அக்கினிக் கோளம், அதன் வழமையான சுழற்சியிலிருந்து விலகியதுடன், பல்லாயிரக்கணக்கான சிறிய துண்டங்களாக உடைந்து சிதறிய பின், பால்வெளியிலுள்ள வாயுவின் சக்தியாலும், அக்கினிக் கோளின் சக்தியாலும் அவை அங்கங்கேயே தடுத்து நிறுத்தப்பட்டன. இத்துண்டங்கள் பல சூரியக் குடும்பங்களாக உருவாகி பால்வெளியிலேயே மிதக்கத் தொடங்கின. இவற்றில் ஆய்வாளர்கள் இதுவரை கண்டறிந்து பெயர் சூட்டியவை 9 கிரகங்கள் மாத்திரமே!!

## எமது சூரியக் குடும்பம்




சூரியனை மையமாகக் கொண்டு அதனைச் சுற்றி வரும் கிரகங்கள் முறையே பூமி (earth), சுக்கிரன் (venus), வியாழன் (jupiter), சனி (saturn), புதன் (mercurry), செவ்வாய் (mars), புளூட்டோ (pluto), நெப்டியூன் (neptune), யுரேனஸ் (uranus) என அழைக்கப்படுகின்றன. இவற்றில் பூமி தவிர்ந்த மற்றைய கிரகங்களில், உயிரினங்கள் வாழ்வதற்கான எந்த ஆதாரங்களோ, தடயங்களோ இதுவரை கிடைக்கவில்லை.

பூமி சூரியனிலிருந்து மூன்று லட்சம் மைல்களுக்கப்பால் உள்ளது. பூமிக்குத் துணைக்கோளாக நிலவு (moon) உள்ளது. இந்த நிலவு தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, பூமியையும் சுற்றி வருவதுடன், பூமியுடன் சேர்ந்து சூரியனையும் சுற்றி வருகிறது. காற்று மண்டலமற்ற நிலவு, மிகவும் குளிர்த்தன்மை வாய்ந்ததாகவும், ஈரப்பு சக்தியற்றதாகவும் உள்ளதனால், உயிர்கள் வாழ்வதற்குத் தகுந்ததல்ல என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சூரியனுக்கு மிக அருகில் இருப்பதனால் அதிக வெப்பம் காரணமாக புதன் கிரகத்திலும் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

சனி கிரகம் தன்னைச்சுற்றி ஒரு வளையத்தைக் கொண்டுள்ளது. புளூட்டோ கிரகம் 1930 ஆம் ஆண்டு தான் கண்டு பிடிக்கப்பட்டது. இது தவிர வேறுபல சூரியக் குடும்பங்கள் அண்டவெளியில் சஞ்சாரம் செய்கின்றன.

www.tamilarangam.net




## பூமியின் தோற்றம்

அக்கினிக்கோளிலிருந்து சிதறிய துண்டங்கள், ஒரு புள்ளியை ஈர்ப்பு மையமாக வைத்து, ஒரே அளவு வேகத்தில் பால்வெளியில் சுற்றிக்கொள்ளத் தொடங்கின.

மையப்புள்ளியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கப்பால் பால்வெளியின் ஒரு பகுதி குளிர்மையாகவும் மிகுதி வெப்பமாகவும் உள்ள காரணத்தினால், மாறி மாறி குளிரையும் வெப்பத்தையும் பெற்றுக் கொண்ட இவ்வக்கினித் துண்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தமது தன்மையை மாற்றிக்கொண்டன. ஆனாலும் மையப்புள்ளி மிகுந்த வெப்பநிலையைக் கொண்டிருப்பதால், அப்பகுதியில் தரித்திருந்த துண்டம் தொடர்ந்தும் அக்கினிக் கோளாகவே இருந்து வருகிறது. இதுவே எமது சூரியன்.

சிதறிப்போய், வந்த இடத்திற்கேற்ப தமது தன்மைகளை மாற்றிக் கொண்ட இத்துண்டங்களில், சூரியனிலிருந்து மூன்று இலட்சம் மைல்கள் தூரத்திலிருந்த ஒரு துண்டத்தின் மேற்பகுதி சிறிது சிறிதாக தனது அதி உக்கிரமான வெப்பத் தன்மையை இழந்து, இறுகிக் கடினமாகிக் கொண்டு வந்தாலும், அதன் உள்பகுதி (மையம்) இத்தனை இலட்சம் வருடங்களுக்குப் பின்னரும் 5000 டிகிரி சென்டிகிரேட் வெப்பநிலையில், இன்னும் கொதிக்கும் அக்கினிக் குழம்பாக கொதித்துக் கொண்டேயிருக்கின்றது.

**இன்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சமஸ்கிருத மொழியில் வெளியாகிய உபநிசம் எனும் ஆன்மீக நூலிலும், கிரேக்கர்களின் வரலாற்றுச் சுவடுகளிலும், அண்டவெளி பற்றியும், நவகிரகங்கள் பற்றியும், இக்கோள்களின் நிலைப்பாடு மற்றும் பூமியிலும், மனித வாழ்விலும் இவை ஏற்படுத்தும் மாற்றங்கள் பற்றியும் எமது முன்னோர்கள் விரிவாகக் குறிப்பிட்டு உள்ளனர். இக்கோள்களின் நிலைப் பாடுகளை வைத்தே ஜாதகங்கள் கணிக்கும் முறையும் உருவாகியது.**




இவ்வக்கினிக் கோளத்திலிருந்து, பல வேளைகளில் ஆக்ரோசமாக வெளியேறிய அக்கினிக்குழம்பு, வாயுவினதும் சூரியனதும் தாக்கத்தினால் தாதுப்பொருட்களாக (minerals) உருமாறி, மையப்பகுதியான அக்கினித் துண்டத்தின் மேல் ஒரு படிமமாகப் படியத் தொடங்கியது. தொடர்ந்து இலட்சக்கணக்கான வருடங்களாக நடைபெற்று வந்த இச்செயற்பாட்டினால், இத்தாதுப்பொருட்களின் மேற்பகுதி, கடினமான பாறைகளாக உருமாற்றம் பெற்று, பின் சூரிய வெப்பத்தின் தாக்கத்தினால் மீண்டும் உடைந்து, மண்ணாக மாறியது. தொடர்ந்தும் இம்மண்ணின் உட்பகுதி, உள்ளேயுள்ள அக்கினிக்குழம்பினதும், புறப்பகுதி சூரியனின் தாக்கத்திற்கும் உட்பட்டிருந்ததனால், வெப்பம் அனலாகக் காற்றில் எழுந்தது. (கடும் வெப்ப காலத்தில் இப்படி எழும் அனலைத் தான் நாம் கானல்நீர் என்கின்றோம்.) இந்த அனலுடன் காற்றின் குளிர்மைத் தன்மை சேர்ந்து கொண்டபோது, நீர் தோன்றியது. மண்ணின் மேற்பகுதியில் பள்ளங்களாக இருந்த பரப்புக்களில் கொஞ்சம் கொஞ்சமாக சேரத் தொடங்கிய இந்த நீரில் ஒரு பகுதி, மேற்பகுதியை ஊடுருவி, படையாக இருந்த தாதுப்பொருட்களையடைய, மிகுதி மேற்பகுதியிலேயே தங்கியிருந்தது. மூன்றில் இரண்டு பகுதி சமுத்திரத்தினாலும், மிகுதி நிலத்தினாலும் சூழப்பட்ட, இன்று நாம் வசிக்கும் பூமி, இப்படியாகத் தான் தோற்றம் கொண்டது.

## இயற்கையின் சீற்றங்கள்!!

எமது பூமி, மையப்பகுதியில் (inner core), 5000 டிகிரி சென்டிகிரேட் வெப்பநிலையில் இன்னும் கொதிக்கும் அக்கினிக் குழம்பாகவும், அதனைத் தொடர்ந்து, நடுப்பகுதியில் (middle core) தாதுப்பொருட்களுடன் நீரையும் கொண்ட தட்டாகவும், மேற்புறம் (upper or outer core) பாறைகளையும், மண்ணையும், நீரையும் கொண்டும், மூன்று அடுக்குகளாக உள்ளது பற்றி மேலே பார்த்திருந்தோம்.

இந்த மூன்றாவது தட்டான மேல் தட்டு, ஒரே துண்டாக இல்லாமல் பல பகுதிகள் இணைந்ததாக உள்ளது. ஆரம்பத்தில் ஆய்வாளர்கள் ஏழு துண்டுகள் என்று கூறியிருந்தாலும், இப்பொழுது அவை மேலும் உடைந்து பிரிந்துள்ளன. இத்தட்டுகள் மெதுவாக நகர்கின்றன என்றால் நம்புவீர்களா!! உண்மை தான்! உள்ளேயிருக்கும் வெப்பத்திற்கேற்ப அவை மிக மெதுவாக நகரும் போது எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால் அடைபட்டுக் கிடக்கின்ற வெப்பம் வெளியேறத் துடிக்கின்ற வேகத்தில் அவசரமாக எல்லாவற்றையும் தள்ளும் போது தான் விளைவுகள் விபரீதமாகின்றன.




உயிர்களின் தோற்றம்: மேற்பகுதியில் தங்கியிருந்த நீரில் காற்று மோதி அலைகளை ஏற்படுத்த, அந்த நீரலைகள் மண்ணுடன் உராய்ந்து கொண்டன. அந்த உராய்வின் போது, ஒரே ஒரு அணுவைக் கொண்ட, கண்களால் தனித்துப் பார்க்க முடியாத, மிகமிக நுண்ணிய ஒரு உயிர் தோன்றியது. இதுவே அமீபா என அழைக்கப்பட்டது. இன்றைய எமது தோற்றத்தின் அடிமூலமாக இந்த அமீபாவே இருந்திருக்கிறது. உயிர்களின் தோற்றம் பற்றியும் அமீபாவிலிருந்து இன்றைய மனிதன் வரையிலான பரிணாம வளர்ச்சி பற்றியும் ஆதாரங்களுடன் பின்னர் பார்ப்போம்!!

www.tamilarangam.net



## Techtonic plates எனப்படும் பூமித்தட்டுக்கள்

- ஈரோசியன் தட்டு (eurasian plate)
- அவுஸ்திரேலியன் தட்டு (australian plate)
- பிலிப்பீன் தட்டு (philippine plate),
- ஜுவன் து பியூகா தட்டு (juan de fuca plate)
- கொக்கோ தட்டு (cocos plate),
- பசுபிக் தட்டு (pacif plate)
- வடஅமெரிக்கத் தட்டு (north american plate),
- நாஸ்கா தட்டு (nazca plate),
- அண்டார்டிக் தட்டு (antartic plate),
- கரிபியன் தட்டு (caribbean plate),
- தென்அமெரிக்கத் தட்டு (south america plate),
- ஸ்கொட்லாந்துத் தட்டு (scotia plate),
- அரேபியன் தட்டு (arabian plate),
- ஆபிரிக்கத் தட்டு (african plate),
- இந்தியத்தட்டு (indian plate) என அழைக்கப்படுகின்றன.




## எரிமலை


மேலேயுள்ள இரண்டு அடுக்குகளுக்குள்ளும் அடைபட்டு, மையப்பகுதியில் கிடக்கும் அக்கினிக் குழம்பு, அழுத்தம் தாங்காமல் அவ்வப்போது வெளியேற முயற்சி செய்கிறது. அப்பொழுது அது தனக்கு மேலேயுள்ள இரண்டு அடுக்குகளிலும் கடினமில்லாத இடங்களை உடைத்துக் கொண்டு அக்கினிக்குழம்பாகவும் தீப்பிழம்பாகவும் வெளியே சீறிப்பாய்கிறது. இதுவே எரிமலை எனப்படுகிறது. இது கடலினுள் கூட ஏற்படுகிறது. ஆனால் கடலினுள் ஏற்படும் எரிமலை பெருமளவில் பாதிப்புக்களைத் தோற்றுவிப்பதில்லை. தரையில் இது ஏற்படும் போது வெளியே உந்தித் தள்ளப்படும் எரிமலைக்குழம்பானது (lava) பாரிய அழிவுகளை ஏற்படுத்தி விடுகின்றது.


## நிலநடுக்கம் அல்லது பூகம்பம் அல்லது பூமியதிர்ச்சி


பூமியின் மையப்பகுதியில் இருக்கும் இந்த அக்கினிக் குழம்பு, நடுப்பகுதியையும், மேற்பகுதியையும் உடைத்துக் கொண்டு வெளியேற முடியாத சந்தர்ப்பங்களில், உள்ளே ஏற்படும் அமுக்கத்தினால் உண்டாகும் அதிர்வலைகள், மேலேயுள்ள இரண்டு படைகளையும் அதிர வைப்பதையே நிலநடுக்கம் அல்லது பூகம்பம் அல்லது பூமியதிர்ச்சி என்கிறோம். இந்த மூன்று படைகளும் ஒன்றன் மேல் ஒன்று படிந்திருந்தாலும் தண்ணீரில் எண்ணெய் போல் தனித்தனியாகவே உள்ளன என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம். ஆகவே உள்ளேயிருந்து வரும் அமுக்கத்தின் வேகத்தால் மேலேயுள்ள படைகள் இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று வழுக்கி, அதன் வழமை நிலையிலிருந்து மாறுபடுகின்றன. இதுவே நிலநடுக்கமாக நம்மால் உணரப்படுகிறது. உள்ளே ஏற்படும் அமுக்கத்தின் வேகத்தைப் பொறுத்து, இந்த வழுக்கும் தன்மை கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கும். இதனாலேயே நிலஅதிர்ச்சியின் தாக்கம் ஒவ்வொரு முறையும் மாறுபடுகின்றது. தவிர, மேற்தட்டின் துண்டங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதாலும் இது ஏற்படுகின்றது.

## சுநாமி (கடற்கொந்தளிப்பு)

உள்ளே ஏற்படும் அமுக்கத்தினால் மையப்பகுதியிலிருந்து உந்தித் தள்ளப்படும் அக்கினிக்குழம்பு எரிமலையாக வெளியேறாமல், நிலத்தினடியில் கடினம் குறைந்த பகுதிகளில் நெருப்பு ஆறாகத் தள்ளப்பட்டு, வெளியேற இடம் தேடுகிறது. இந்நெருப்பாறு நிலத்திற்கடியில் ஓடும் போது பூமி அதிர்ச்சியை மாத்திரம் தோற்றுவிக்கிறது. ஆனால் கடலினடியில் இந்நெருப்பாறு ஓடும் போது, அந்தப்பகுதியில் ஏற்படும் நில அதிர்வினால், கடல் கொந்தளிக்கிறது. இதைவிட நேரடியாக கடலின் அடியில் ஏற்படும் நிலநடுக்கத்தினாலும் கடல் கொந்தளிக்கிறது. அதாவது நிலத்திலேற்படும் அதிர்வு கடலினடித்தளத்தில் நீரில் தனது சக்தியைப் பிரயோகிப்பதால், கடல் தனது அலைக்கரங்களை ஆக்ரோசமாக எழுப்பி கோரத்தாண்டவமாடுகிறது. இதையே சுநாமி என்றழைக்கிறார்கள்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுநாமி - சிறப்புக் கட்டுரை

சுநாமி (tsunami) எனும் இச்சொல் ஜப்பானிய மொழியிலிருந்து பிறந்தது. அதாவது சு (tsu) என்பது துறைமுகம் அல்லது கரையோரங்களில் மக்கள் வாழும் பிரதேசங்களைக் குறிக்கின்றது. நாமி (nami) எனப்படுவது இராட்சத அலை. அதாவது இராட்சத அலைகள் கரையோரப்பகுதிகளைத் தாக்குவதையே சுநாமி என்று அழைக்கின்றார்கள். கலங்கரை விளக்குகளை விடவும் உயரமாக எழும்பக்கூடிய சக்தி வாய்ந்தவை இந்த அலைகள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!!!

பூமி அதிர்ச்சியின் வேகமும், அதனால் வருடாந்தம் சராசரியாக ஏற்படும் விளைவுகளையும் கீழே உள்ள அட்டவணையில் காண்கின்றீர்கள்!

| | அளவு | வருடத்திற்கு சராசரி |
|---|---|---|
| மிகச்சிறியது | 2 - 2.9 | 1,300,000 (மதிப்பிடப்பட்டது) |
| சிறியது | 3 - 3.9 | 130,000 (மதிப்பிடப்பட்டது) |
| இலேசானது | 4 - 4.9 | 13,000 (மதிப்பிடப்பட்டது) |
| நடுத்தரமானது | 5 - 5.9 | 1319* |
| கடுமையானது | 6 - 6.9 | 134* |
| பெரியது | 7 - 7.9 | 17* |
| மிகப்பெரியது | 8ம் கூடியதும் | 1** |

** - 1900 ஆம் ஆண்டிலிருந்து கணக்கிடப்பட்டது

* - 1990 ஆம் ஆண்டிலிருந்து கணக்கிடப்பட்டது

ஆதி காலத்தில் நில நடுக்கத்தை எப்படி அளவிட்டார்கள் தெரியுமா? கீழேயிருக்கும் பொருளைப் பார்த்து, இது ஒரு அழகு பொருளோ அல்லது சமையல் செய்யும் பாத்திரமோ என்று எண்ணி விடாதீர்கள்!! சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, உபயோகப்படுத்தப்பட்ட, நிலநடுக்கத்தை அளவிடும் கருவியே இது!!




கி. பி. 78 ஆம் ஆண்டில் சீனாவில் பிறந்த சாங் கெங் (Zhang Heng) எனும் புவியியல், வானியல் ஆராய்ச்சியாளர், கி. பி. 132ம் ஆண்டில் முட்டை வடிவில் செப்பினால் ஒரு கருவியை அமைத்தார். Hou Feng Di Dong Yi என அழைக்கப்பட்ட இக்கருவியின் மேல் பகுதியில் எட்டுத் திசைகளிலும் ஒவ்வொரு டிராகன் அமைக்கப்பட்டு, அவற்றின் வாயினுள் ஒரு உலோக உருளை வைக்கப்பட்டிருக்கும். எட்டுத்திசையிலும் எட்டுத் தவளைகள் அமைக்கப்பட்டு அவற்றின் திறந்த வாய்களினுள் நீர் நிறைக்கப்பட்டு, ஒரு பெரிய தட்டினுள், மேலே கூறிய பாத்திரத்தை வைத்து, ஈரமில்லாத ஒரு வெளியில் இவற்றை வைத்துவிடுவார்கள். பூமிஅதிர்ச்சி ஏற்படுத்தும் அதிர்வினால், டிராகனின் வாயின் உள்ளே உள்ள உருளை, தவளையின் வாயினுள் விழும் வேகத்தால், ஏற்படும் சத்தத்தையும் நீர் தெறித்துப்பரவும் தூரத்தையும் வைத்தே பூமி அதிர்ச்சியின் அளவைக் கணக்கிட்டனர். இதன் மூலம் வரவிருக்கும் பூகம்பத்தின் வேகத்தை மாத்திரமல்ல, அதன் திசையையும் முன்கூட்டியே அறிந்து கொண்டனர். கி. பி. 138 ஆம் ஆண்டு மாசி மாதம் சீனாவைத் தாக்கிய பூகம்பம் பற்றி, சாங் கெங் (Zhang Heng), வடமேற்கில் உருவாகியுள்ள ஒரு பூகம்பம் இத்திசை நோக்கி நகர்கின்றது எனும் தகவலை சில நாட்கள் முன் கூட்டியே வழங்கியிருந்தார் என்றால் பாருங்களேன்!!!!

இதற்கு பின் கிட்டத்தட்ட 1700 ஆண்டுகள் கழித்துத் தான் ஐரோப்பியர்கள் Seismograph (அதிர்வலைமானி) எனும் பூகம்பத்தின் வேகம், காலம் ஆகியனவற்றை அறிவிக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தனர்.

## சார்ள்ஸ் பிரான்சிஸ் றிக்டர் (Charles Francis Richter - 1900-1985)

26 ஏப்ரல் 1900 ஆம் ஆண்டு Hamilton (Ohio) அமெரிக்காவில், விவசாயக் குடும்பமொன்றில் பிறந்தவர் சார்ள்ஸ் பிரான்சிஸ் றிக்டர்.


இப்புவியியல் ஆய்வாளர், நில அதிர்வின் தீவிரத்தை அளவிடுவதற்காக 1880 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டு அப்பொழுது நடைமுறையிலிருந்த, (Rossi) ரோசி அளவிடு முறை, மற்றும் 1902 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டு நடைமுறையிலிருந்த மேர்க்காழி (Mercalli) அளவிடு முறை ஆகியனவற்றில் சரியான முறையில் பூமி அதிர்வின் தீவிரத்தை அளவிட முடியவில்லை என அதிருப்தி கொண்டதன் விளைவாகத் தானாகவே ஒரு அளவு முறையை நிர்மாணித்தார்.



1935 ஆம் ஆண்டு சார்ள்ஸ் பிரான்சிஸ் றிக்டர் கண்டுபிடித்த இம்முறையே இன்று பூகம்பத்தை அளவிட நடைமுறையிலுள்ள றிக்டர் (Richter) அளவாகும். பின்னர் 1956 ஆம் ஆண்டில் இவ்வாய்வாளர் பெனோ கெட்டன்போர்க் [Beno Gutenberg (1889-1960) எனும் ஆய்வாளருடன் இணைந்து, 0 றிக்டர் அளவு வெப்பத்தின் வேகம் (Joules) 104 முறை கடுமையானது எனும் பட்சத்தில், 9 றிக்டர் வெப்பத்தின் வேகம் 1017 முறை கடுமையானது என்பதை நிரூபித்துக் காட்டினார்.

www.tamilarangam.net






1985 ம் ஆண்டு செப்டெம்பர் 30 ம் திகதி கலிபோர்னியாவில் அல்ட்டாடெனா எனும் இடத்தில் சார்ள்ஸ் பிரான்சிஸ் றிக்டர் இறந்தாலும், இன்றளவும் பூமி அதிரும் போதெல்லாம் இவர் பெயர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது.


சுநாமி (கடற்கொந்தளிப்பு) கரையோரப்பகுதிகளைத் தாக்குவதற்கு முன்னர், மெல்லியதாகவோ அல்லது காட்டமாகவோ அப்பகுதிகளில் நிலஅதிர்வு உணரப்படுகின்றது. அத்துடன் சில வேளைகளில் மிக அரிதாக, கடல் உள்வாங்கிக் கொண்டு, பின் பெருகுகிறது. கடலின் அருகிலிருக்கும் கிணறுகளிலும் மிக மிக அரிதாக நீர் மட்டம் உயருவதையும் அவதானித்து இருக்கின்றனர்.


ஆதிகாலத்தில் இயற்கையின் சீற்றங்கள் யாவும் கடவுளின் தண்டனை என்று நம்பப்பட்டது. பின்னர் ஏனைய கிரகங்களின் ஈர்ப்பு சக்தியால் கடல் நீர் மட்டத்தில், ஏற்றமும், வற்றலும் உண்டாகின்றதனால் கடற் கொந்தளிப்பு ஏற்படுகிறது எனக் கருதப்பட்ட போது, கடற்கொந்தளிப்பு tidel waves என அழைக்கப்பட்டது. 1963 ம் ஆண்டு நடைபெற்ற உலக அறிவியல் மாநாட்டில், கடற்கொந்தளிப்பிற்கு சுநாமி என உலக அளவில் பெயர் சூட்டப்பட்டது.

சுநாமி உருவாகும் கடலின் ஆழத்திற்குத் தகுந்தபடி, அலைகளின் வேகமும் உயரமும் மாறுபடும், இது ஒரு தனி அலையாக இல்லாமல், அலைகளின் தொடர்ச்சியாகவே இருக்கும். இவ்வலைகள் அவை உருவாகும் வேகத்தைப் பொறுத்து, சமுத்திரத்தின் பல்லாயிரக்கணக்கான மைல்களை அதன் வீச்சும் வேகமும் குறையாமல் கடந்து மிக மிகத் தொலைவில் கூட பாதிப்புகளை ஏற்படுத்த வல்லன. ஒரு மணிநேரத்திற்கு 500 மைல்கள் (ஏறக்குறைய 800 Km) வேகத்தில் நகரக்கூடியவை இவை. ஒரு ஜெட் விமானத்தின் வேகத்தினுடன் ஒப்பிடக்கூடிய இவ்வலைகள், நீரிலான பிரமாண்டமான சுவரொன்று மிகவேகமாக முன் நோக்கி ஓடிவருவதைப் போல கிட்டத்தட்ட 60 மைல்களிலிருந்து (ஏறக்குறைய 100 Km) 150 மைல்கள் (ஏறக்குறைய 250 Km) வரை நீளம் கொண்டவையெனவும் பூகம்பத்தின் அதிர்வின் அளவைப் பொறுத்து 65 மீற்றர் உயரம் வரை எழும்பக் கூடியன என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உதாரணத்திற்கு 1960 ல் சிலி நாட்டில் ஏற்பட்ட நில நடுக்கத்தைத் தொடர்ந்து உருவாகிய சுநாமி 16,800 Km தொலைவிலுள்ள ஜப்பானை 24 மணிநேரத்தினுள் சென்று தாக்கியதையும், இம்முறை சுமத்ராவில் உருவாகிய சுநாமி, 3,000 மைல்களை (5,000 Km) கடந்து ஆபிரிக்காவைத் தாக்கியதையும் குறிப்பிடலாம். இன்னும் சொல்வதானால், வடஅமெரிக்காவின் பசுபிக்கரையினில், 1700 ம் ஆண்டு தை மாதம் 26 ந்திகதி செவ்வாய்க்கிழமை 9.0 றிக்டர் அளவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த பூமி அதிர்ச்சியைத் தொடர்ந்து ஆறு மணித்தியாலங்களின் பின்னர் ஏற்பட்ட சுநாமி, பத்திலிருந்து இருபது மணிநேரங்களுக்குள் பசுபிக் சமுத்திரத்தைக் கடந்து, ஆசியக்கண்டத்தை அடைந்து ஜப்பானை பெருமளவில் சேதத்துக்குள்ளாக்கியிருந்தது.







ஆழம் குறைந்த கரையோரப் பகுதிகளை அண்மிக்கும் போது, இவ்வலைகளின் வேகம் 20, 30 மைல்கள் குறைந்தாலும் கூட, இவ்வலைகளின் மேற்பகுதி நகரத்தினுள் தூரத்திற்குப் பாய்ந்தும், கீழ்ப்பகுதி கரைகளையும் அழிக்கின்றன என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அதாவது அதன் வேகம், விசை உரு மாறுகின்றது. இந்த நீண்ட நெடும்பயணத்தின்போது, தோன்றும் இடத்து மணலையும், கடலின் கருப்பையில் மறைந்திருக்கும் பொருட்களையும் இவ்வலைகள் தம்முடனேயே கடைசிவரை கொண்டு செல்கின்றன.


ஆனாலும் சில வேளைகளில் கடலின் நீர் மட்டம் பெரு மளவில் உயராமல் கடலடி நீரோட்டம் போல், சுநாமி அலைகள் நீரின் கீழாக வேகமாக ஓடி கரையை அடையும் போது, பிரமாண்ட மான அலைகளாக எழுந்து தாக்கும். கப்பலில் இருப்போருக்குக் கூட, தங்களுக்குக் கீழே வேகமாக ஒரு ராட்சதன் கோரத்தாண்டவம் ஒன்றிற்குத் தயாராகப் போகின்றான் என்பது தெரியாமல் இருக்கும்.

இந்தோனேசியாவில், கிறகத்தோ (krakatau) எனுமிடத்தில் 1883ம் ஆண்டு ஆகஸ்ட் 26 அன்று ஏற்பட்ட எரிமலைக் குமுறலைத் தொடர்ந்து உருவாகிய சுநாமியே, இதுவரையில் மிகப்பெரியதும், அதிகளவில் சேதங்களை உருவாக்கியதுமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்போது 135அடி (45 மீற்றர்) உயரத்திற்கு எழுந்த பிரமாண்டமான அலைகள், ஜாவா, சுமத்ரா தீவின் கரையோரப்பகுதிகளைத் தாக்கியழித்ததில் 36,417 பேர் கொல்லப்பட்டனர்.

உலகின் மூன்றிலொரு பகுதியான பசுபிக் சமுத்திரம், மிகவும் ஆழமான பெருஞ்சமுத்திரமாக இருப்பதனாலும், அங்கு தீவுகள் பல இருப்பதாலும், இதனைச் சுற்றி மலைத்தொடர்கள் அமைந்திருப்பதாலும், பெரும் எண்ணிக்கையிலான சுநாமிகள் பசுபிக் சமுத்திரத்திலும் அதன்

www.tamilarangam.net






எல்லைகளிலுள்ள கரையோரப் பிரதேசங்களான கம்சட்கா (Kamchatka) ஜப்பான், குறில் தீவுகள் (Kuril Islands) அலாஸ்கா, தென்அமெரிக்கா ஆகியனவற்றிலுமே தோன்றுகின்றன. இதனால் இப்பகுதி நெருப்பு வளையம் (Ring of fire) என அழைக்கப்படுகிறது.

இது தவிர சுமத்ரா தீவைச்சுற்றியுள்ள சமுத்திரத்தில் எக்கணத்தில் வேண்டுமானாலும் இயற்கை அன்னை சீற்றம் கொள்ளக் கூடும் எனும் பயத்திலேயே மக்கள் வாழ்கின்றனர். தோட்டாக்கள் நிரப்பப்பட்ட துப்பாக்கி என்று பீதியுடனேயே அழைக்கப்படுகிறது இப்பகுதி!!!

## 20ம் நூற்றாண்டில் உலகை உலுக்கிய சுநாமிகள்

1 1946 ம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி, சுநாமி அலாஸ்காவின் அலூசியன் தீவில் 7.8 றிக்டர் அளவில் பதிவாகியது. கடல் மட்டத்திலிருந்து 30 மீற்றர் உயரத்திற்கு எழுந்து நின்ற கலங்கரை விளக்கை, 35 மீற்றர் உயரம் வரை எழுந்த பாரிய அலைகள் முற்றாக நிர்மூலமாக்கின. இதில் பணியிலிருந்த ஐவர் பலியாகினர். ஐந்து மணிநேரத்தின் பின்னர் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஹவாய் தீவைத்தாக்கிய இச்சுநாமி 159 பேரைப்பலி கொண்டதுடன், அன்றைய பெறுமதியின்படி 26 மில்லியன் டொலர்கள் பெறுமதியான உடமைகளையும் அழித்தது. இதன் விளைவுகளைத் தொடர்ந்து, 1948 ம் ஆண்டு, அமெரிக்கா, ஹவாய் தீவில் சுநாமி எச்சரிக்கை மையம் ஒன்றை அமைத்தது.

2 1952 ம் ஆண்டு நவம்பர் நான்காம் திகதி, ரஷ்யாவின் கிழக்குப் பகுதியின் கம்சட்கா (kamchatka) குடாமுனை உட்பட பல பகுதிகளைத் தாக்கிய இச்சுநாமி, 9.0 றிக்டர் அளவில் பதிவாகியது. அத்துடன் ஜப்பான், பெரு, சிலி, நியூசலாந்து, அலூசியன் தீவுகள், கலிபோர்னியா, ஹவாய் தீவுகள் ஆகியனவற்றிலும் தனது அலைக்கரங்களை நீட்டியதில், 1952 ம் ஆண்டின் பெறுமதிப்படி, 8 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் டொலர்கள் பெறுமதியான உடமைகளையும் அழித்தது. இங்கு அலைகள் 18.4 மீற்றர் உயரம் வரை எழுந்து தாண்டவமாடியுள்ளன.

3 9 மார்ச் 1957 ல் மீண்டும் ஒரு முறை, 1946 ம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி, சுநாமி தாக்கியழித்த அதே அலாஸ்காவின் அலூசியன் தீவுகளிலுள்ள அன்றியனோவ் தீவின் (Andreanof Islands) தெற்குப் பகுதியில், 9.1 றிக்டர் அளவில் தாக்கிய சுநாமி 16 மீற்றர் உயரமான அலைகளை எழுப்பியது. 1952 ம் ஆண்டு மீளப்புனரமைக்கப்பட்ட கொக்கனட் தீவுடனான இணைப்புப் பாலம் உட்பட பல உடமைகள் இந்த மீள் தாக்குதலால் நாசமாகின. கொக்கனட் தீவைமூடி ஒரு மீற்றர் உயரத்திற்கு நீர் நின்றது. அன்றைய பெறுமதியின்படி, அழிந்த சொத்துக்களின் மொத்தப் பெறுமதி 5 மில்லியன் டொலர்கள் என்றாலும், உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

4 20ம் நூற்றாண்டின் அதிசக்திவாய்ந்த சுநாமி, 1960 ம் ஆண்டு மே மாதம் 22 ம் திகதி சிலி நாட்டின் தெற்குப் பகுதியில் உருவாகித் தாக்கியதுடன், பசுபிக்கிலுள்ள ஏனைய தீவுகளையும், குறிப்பாக ஹவாய் தீவுகள், ஜப்பான் ஆகியவற்றைத் தாக்கியழித்தது. சிலியில் மாத்திரம் 2300 பேர் இச்சுநாமிக்கு இரையாக, மற்றைய நாடுகளில் பெருந்தொகையானோர் மாண்டனர். 1960 ம் ஆண்டின் பெறுமதிப்படி அழிந்து போன சொத்துக்கள் 500 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டன. இச்சுநாமி 9.5 றிக்டர் அளவில் பதியப்பட்டது.

5 பூகோளத்தின் வடக்குப் பகுதியில், 20ம் நூற்றாண்டின் மிகப்பெரிய பூகம்பமாக கொள்ளப்படுவது, 28 மார்ச் 1964 ல் அலாஸ்காவின் த பிரின்ஸ் வில்லியம் சவுண்ட் (the Prince William Sound) எனுமிடத்தில் ஏற்பட்ட சுநாமியே. 9.2 றிக்டர் அளவில் பதிவாகிய இச்சீற்றம் 1600 கி.மீ. நீளத்தையும் 300 கி.மீ. அகலத்தையும் கொண்ட அலாஸ்காவின் ஒரு பகுதியைப் பெருமளவில் தாக்கியதுடன், கிட்டத்தட்ட ஒரு இலட்சத்துப் பதினையாயிரம் சதுர மைல் அளவிலான பிரதேசத்தை சமநிலையற்ற மேடு பள்ளங்களுடனான நிலமாக மாற்றியது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சுநாமியின் அலைகள், தென் அலாஸ்கா, வான்கூவர் தீவு, அமெரிக்காவின் வாசிங்டன், கலிபோர்னியா மற்றும் ஹவாய் தீவுகளையும் சேதத்துக்குள்ளாக்கியது. அலாஸ்காவின் ஏழு பெரிய நகரங்களில் ஐந்து, இதனால் பெருமளவில் அழிந்து போனது. 161 பேர் பலியாகினர். கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிரசென்ட் சிட்டியில்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6 மீற்றர் உயரத்திற்கு அலைகள் எழுந்தன. இங்கு மட்டுமே, 1964 ம் ஆண்டுக் கணக்கின்படி, 7,414,000 டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் சேதமாகியுள்ளன என மதிப்பிடப்பட்டன. கலிபோர்னியாவில் 1964 ம் ஆண்டுக் கணக்கின்படி, 1,500,000 இலட்சத்திலிருந்து 2,375,000 டொலர்கள் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமாகியதாக மதிப்பிடப்பட்டது.

**இதுவரையில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியவை என்று வர்ணிக்கப்பட்ட சுநாமிகள் எல்லாவற்றையும் தூக்கி விழுங்கி விட்டது, 26 டிசம்பர் 2004 அன்று, தென்னாசியாவின் பல பகுதிகளை வாரியள்ளி வாயில் போட்டுக் கொண்ட சுநாமி!!!**




இந்தியப் பெருங்கடலில், சுமத்ரா தீவிற்கருகில் தோன்றிய இச்சுநாமி 9.0 றிக்டர் அளவில் பதிவாகியுள்ளது. இந்தோ-ஆவுஸ்திரேலியன் தட்டும் யூரேசியன் தட்டும் உரசிக் கொண்டதன் விளைவாக, யூரேசியன் தட்டு மற்றயதன் மேல் ஏறிக்கொண்டது. அமுங்கிப்போன இந்தோ-ஆவுஸ்திரேலியன் தட்டின் பக்கம் அப்படியே சாய்ந்து கொண்டாள் கடலன்னை. இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து என இன்னும் பல ஆசிய நாடுகளை அள்ளி அள்ளித் தின்றும் பசியடங்காமல், தன் கோரக்கரங்களை தென்னாபிரிக்கா வரை நீட்டி, சோமாலியாவின் கரை யோர மக்களையும் தன் பசிக்கு இரையாக்கிக் கொண்டது இச்சுநாமி!

1 இலட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளதாகவும் பல இலட்சக்கணக்கான மக்களைக் காணவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. பல ஆயிரம் கோடிகள் பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளன.

இலங்கையின் வரலாற்றிலேயே முதல் தடவையாக ஏற்பட்ட சுநாமிப்பேரழிவு இது! ஆனால் இந்திய வரலாற்றில்

**26-12-2004 சுநாமி பலிகொண்ட உயிர்கள்:**

இந்தோனேசியா - 104,055, இலங்கை - 30,513, இந்தியா - 10,001, தாய்லாந்து - 5,288 சோமாலியா - 298, மாலதீவு - 82, மலேசியா - 67, பர்மா - 64

இன்றய பூம்புகார் நகரின் துறைமுகம் புதைந்தழிந்து போனது சுநாமியினால் தான் என்பது தெரிந்ததே!!

## சுநாமி முன்னெச்சரிக்கை மையங்கள்

1 **The west coast Alaska Tsunami Warning Center**
**NOAA / NWS / WCATWC**
**910 south Felton street**
**Palmer, Alaska 99645**

1964 ம் ஆண்டு அலாஸ்காவின் Prince William sound ல் ஏற்பட்ட சுநாமியைத் தொடர்ந்து, 1967 ம் ஆண்டு இம்மையம் நிறுவப்பட்டது. அலாஸ்காவின் மேற்குப் பகுதியில் இருக்கும் கலிபோர்னியா, மெக்ஸிகோ, வாசிங்டன், ஒரேகொன் கரையோரங்களை கண்காணிக்கும் இம்மையத்திலிருந்து 500 கிலோ மீற்றர்களுக்கப்பால் சுநாமியின் அறிகுறி தோன்றும் போதே, இந்நாடுகளுக்கு முன்னெச்சரிக்கை செய்தி அனுப்பப்படுகின்றது.

2 **Pacific Tsunami Warning Center**
**91-270 FT weaver road**
**Ewa beach. HI 96706**

1946 ம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி, அலாஸ்காவின் அலூசியன் தீவில் ஏற்பட்ட அழிவைத் தொடர்ந்து, 1949 ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை **(U.N.O)** வழங்கிய உதவித் தொகையான 30 மில்லியன் டொலர்களுடன் இம்மையம் நிறுவப்பட்டது. 2001 ம் ஆண்டில், **Richard. H. Hagemeyer Pacific Tsunami Warning Center** என்று இதன் பெயர் மாற்றியமைக்கப்பட்டது. 24 மணிநேரமும் விழிப்புணர்வோடு பசுபிக் சமுத்திரத்தைக் கண்காணித்து எச்சரிக்கை செய்கின்றது இம்மையம்.

3 **International Tsunami Information Center**


சர்வதேச நாடுகளின் சமுத்திர ஆய்வாளர் உயரலுவலகம் **(Intergouvernementel ocean graphic commission)** யுனெஸ்கோ **(U.N.E.S.C.O. - United Nation Educational Scientifique and Culture Organisation)** வின் உதவியுடன் 1965 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தகவல் பரிமாற்றம் செய்ய உதவும் செயற்கைக்கோள்

ஆழ்கடலில் பொருத்தப்பட்டிருக்கும் நில அதிர்வுகளை பதிவு செய்யும் கருவி

ஆழ்கடலின் நில மட்டத்திலிருந்து செய்திகளை பெற்று செயற்கைக்கோளுக்கு அனுப்பிவைக்கும் கருவி பொருத்தப்பட்ட மிதவை.

## சுநாமி முன்னெச்சரிக்கை மையங்கள் சுநாமி பற்றிய தகவல்களை எவ்வாறு முன்கூட்டியே அறிகின்றன?

ஆழ்கடலின் நிலமட்டத்தில், ஒரு செ.மீ. அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டாலும், அதன் அதிர்வுகளைத் துல்லியமாகக் கணக்கெடுத்து உடனுக்குடன் தகவல் தரக்கூடிய கருவியொன்றை நங்கூரத்துடன் இணைத்து கடலின் அடியில் போட்டு விடுவார்கள்! அதனுடன் செய்திக்கம்பி (Wire) ஒன்றை இணைத்து, நீர்மட்டத்தின் மேல் மிதக்கக்கூடிய ஒரு மிதவையின் மேல், செய்திகளைச் சேகரித்துப் பிரதிபலிக்கும் கருவியுடன் பொருத்தி விடுவார்கள்.

இக்கருவி, கடலினடியில் நிலமட்டத்தில் இருந்து கிடைக்கும் செய்திகளை உடனுக்குடன் செயற்கைக் கோளுக்கு அனுப்பி வைக்கின்றது. செயற்கைக்கோள், அவற்றைத் தனது கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பி வைக்கும். கட்டுப்பாட்டு அறையில் பணியிலிருப்பவர்கள் உடனடியாக இத்தகவல்களை மீண்டும் செயற்கைக் கோளின் மூலம், சுநாமி முன்னெச்சரிக்கை மையங்களுக்கு அனுப்பி வைப்பார்கள். இத்தகவல்கள், சுநாமி முன்னெச்சரிக்கை மையத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு மிகமிக விரைவில் அனுப்பி வைக்கப்படும். இவ்வளவு விடயங்களும் மிகவும் துரிதமாக நடைபெறும்! இந்தியா, இலங்கை ஆகிய மற்றும் பல நாடுகள் இன்னும் இம்மையங்களில் தம்மை இணைத்துக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.!

இந்நிறுவனங்களில் அங்கத்தினராகும் நாடுகளுக்கு உடனுக்குடன் எச்சரிக்கைச் செய்திகளை இம்மையங்கள் அனுப்பிக் கொண்டிருக்கும். இது தவிர கரையோரங்களில் பொருத்தப்படும் கருவிகள், எச்சரிக்கை ஒலி எழுப்பி வரவிருக்கும் அபாயத்தை அறிவிக்கும். இதுவரையில் எந்த வித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்காமலிருந்த நாடுகள், இனிமேலாவது உயிர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வார்களென நம்புவோம்!!!

இயற்கை எப்படியோ அதேபோல் இயற்கையின் படைப்பான மனிதனும் அமுக்கப்பட்டு, அடக்கப்பட்டுக் கிடக்கும் உணர்வுகளுக்குச் சரியான முறையில் வடிகால் கிடைக்காதவிடத்து, வரம்புகளை உடைத்துக் கொண்டு, எல்லைகளை மீறுகின்றான். இதனால் அவன் மாத்திரமில்லாது அவன் சார்ந்தோரும் பாதிக்கப்படுகின்றனர். நம்மில் எத்தனை பேர் இதனைப் புரிந்து கொண்டு வாழ்கின்றோம்????????

**தகவல் தொகுப்பு: சயந்தன், மீரா**

www.tamilarangam.net



# ஆழியின் அலை வீச்சிலே.........

நித்தம் நித்தம்
கரையைத் தழுவி
மொத்தமாய் வந்த மோகமோ??
தரையில் வாழும்
உயிரின் அழிவில்
தவிப்பைத் தீர்த்தாள் ஆழிமகள்....

தாகமென்று தவித்த உயிர்கள்
தண்ணீரை
யோகமென்று தானே
தம்மோடு கலந்தன!
தேகத்தை உயிரிற் பிரித்த
தண்ணீரின் தாகத்திலேன்,
இத்தனை
தாட்சண்யமின்மை........??

படைத்துக், காத்து, அழித்து
அருளும் மாதேவனுக்கு,
மா கடலென்ன
மானிட மறைப்புத் தொழிலின்
மந்திர திராவகமோ ???

அலையிற் குளித்து
ஆனந்தங் காணும்
மீனும், மீனவனும்
ஆழியின் கொழிப்பிலே
அர்ப்பணமானது,
கவலைப் பிரசவத்தில்
கண்ணீரான போது,
உப்புக்கரித்த நீரை வெறுத்து,
அழவே மறுத்தன விழிகள்!!!

வெம்பிப் புடைத்து
வேகத்தால் அழித்து
நம்பி வாழ்ந்தவர்க்கு
நம்பிக்கைத் துரோகியானாய்...

வரையறைக்குள்
வாழப் பழகாது
கரையைத் தாண்டிக்
களங்கம் சூடினாய்....

ஆழி மகளே
உனக்கேனிந்த
அற்ப குணம் ??
அடக்கத்தை யாரிடம்
அடகு வைத்தாய் ????
பெண்ணென்ற சொல்லிற்கே
பொருத்தமில்லா உன்னை
கடலன்னை என்பது
கற்பனைச் சொற்களா ???

ஒன்று புரியவில்லை...
ஆழிமகளே - நீ
வரலாற்றுக்கு
வாழ்வு கொடுக்க..,
சேயின்
சந்தேகப் பார்வைக்குள்
தாயென்ற ஸ்தானத்தை
தகனம் செய்ததேனோ??????

இரா. திலீபன்

www.tamilarangam.net



# வாழ்த்துச் செய்தி

**சமுதாய மறுமலர்ச்சி வேண்டும். குருட்டுப் பண்பாட்டின் காலடியில், இரக்கமற்ற சமூகக் கட்டுப்பாடுகளின் கீழ் நசுக்கப்படும் உணர்ச்சிகளுக்கு விடுதலை வேண்டும்.**

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கத்துடன் எழுதிக் கொள்வது,

எமது சமூக மேம்பாட்டிற்கு வழி வகுத்த காரணிகளான புலமைசார் புலமைத்துவங்களின் தலைமையும் வழிகாட்டலும் கிடைக்காத இன்றைய காலகட்டத்தில் தாங்கள் வெளியிடும் வார ஏட்டின் மூலம், மக்கள் விழிப்புணர்வுக்காகப் பணியாற்ற முன்வந்துள்ள தங்களுக்கு முதற்கண் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மாற்றம் வேண்டும்

முயற்சி உடையார் இகழ்ச்சியடையார், முயன்றால் முடியாதது என்று ஒன்றில்லை! செய்து முடிக்கப்பட்ட சாதனைகள் எல்லாம் முடியாதவை என்று ஒருநாள் கை விடப்பட்டவை தான்! எதிலும் மாற்றம் வேண்டும்! அதற்கு நாம் மாற வேண்டும்!

விண்ணிலே வீடமைத்து வாழும் நிலைக்கு மனிதன் அறிவு வளர்ந்திருக்கிறது. என்றாலும் கூட மனிதனை விட மிகச்சிறிய ஜீவராசிகள் இயற்கை அறிவின் துணை கொண்டு செய்யும் சாதனைகள் மனிதனுக்கு அறை கூவலாகவே விளங்குகின்றது என்றால் மறுப்பதற்கில்லை.

கல்வியில் மாற்றம் வேண்டும். சமுதாய மறுமலர்ச்சி வேண்டும். குருட்டுப் பண்பாட்டின் காலடியில், இரக்கமற்ற சமூகக் கட்டுப்பாடுகளின் கீழ் நசுக்கப்படும் உணர்ச்சிகளுக்கு விடுதலை வேண்டும். அதற்காக மாற்றம் வேண்டும்.

மனிதன் கசப்பான அனுபவங்களை நினைத்த மாத்திரத்தில் பயந்து நடுங்குகின்றான். தனக்கு சம்பந்தமில்லாத விடயமென அஞ்சி நடுங்கி ஒதுங்கி விடுகின்றான். மனிதநேய உணர்வுகளுக்கு ஊக்கம் தர மறுக்கின்றான். மனிதன் மாற வேண்டும். தன்னால் புரிந்து கொள்ள முடியாத எதையும் ஏற்கும் நிலையிலிருந்து மாறவேண்டும்.

தமிழர்களாகிய எமது ஆராய்ச்சி மனப்போக்கு, எமது இனத்தின் முன்னேற்றத்திற்குத் தடையான தென்றால் ஏற்றுக் கொள்ள எத்தனை பேர் தயார்? வெள்ளைக்காரர் ஆராய்ச்சியோ அடுத்த ஆண்டில் என்ன மாறுதல் செய்யலாம் என்பதை நோக்கியதாகவே இருக்கிறது. ஆனால் எங்கள் ஆராய்ச்சியோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்ததோ அப்பிடியே இருக்க என்ன செய்யலாம் எனத் தொல் காப்பிய ஆராய்ச்சி செய்யப்படுகிறது. இதையும் கலை கலாச்சார பண்பாடு கருதி ஏற்றுக் கொண்டாலும், அறிவுக்குப் பொருந்தாததை, அவசியத்தை அறியாமல், சரியாகப் புரிந்து கொள்ளாமல், ஆழ்வார்கள் சொன்னார்கள், ஆச்சாரம் சொல்கிறது என்று அறிவுக்கு அப்பாற்பட்டதை எல்லாம் ஏற்றுத் தலையாட்டி ஆமாம் போடும் நிலை மாறவேண்டும். மாற்றவேண்டும்.

பொதுஅறிவை விரிவாக்கிக் கொள்ளத்தக்க, ஏற்கும் படியான மாற்றம் வேண்டும். ஆத்திகமா? நாத்திகமா? மத உணர்ச்சி உண்டா? இல்லையா? சாதியில் உயர்ந்தவனா? தாழ்ந்தவனா? என்கின்ற ஆதிக்க நிலையில் மாற்றம் வேண்டும்.

இந்த நூற்றாண்டு வரை மறுமலர்ச்சிகளையும், பல மாறுதல்களையும் கண்டிருக்கின்றோம். இருந்தும் இன்னமும் மண்டிக்கிடக்கும் மூடப்பழக்க வழக்கங்களை அறிவொளியால் மாற்றமடைய வைக்க வேண்டியுள்ளது. அந்தக் காலத்தில் ஏழைகளுக்கு உதவுங்கள் என்று அறம் கற்றுத் தந்தது. ஆனால் இன்றைய அறிவு அதை மாற்றி ஏன் ஏழைகள் உருவாகின்றார்கள் என்று சிந்திக்க வைத்தது. அதற்கான திட்டங்கள் தீட்டச் செய்தது.

சமூகச் சூறாவளியில் சிக்கி, உருவாகி, உயர்வது தான் மறுமலர்ச்சி. இன்னும் வேண்டும் மாற்றம். முடியும் என்பது நம்பிக்கையின் ஆரம்பம்! முயற்சி என்பது முன்னுரை, மறுமலர்ச்சிக்கு வித்து! செயலுக்கு ஆதாரம்! வெற்றிக்கு ஊன்றுகோல்!!

சமுதாய ஒருமைப்பாடு மாற்றத்தை உருவாக்கும். ஒன்று சேருங்கள்! இன்றே செயற்பட்டால் தான், நாளையேனும் வெற்றி பெற முடியும்!

**பாதங்கள் நடக்கத் தயாரானால்,**

**பாதைகள் மறுக்கப் போவதில்லை!!!**

இலங்கையில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக்கொண்ட கவிஞர் இராசலிங்கம், கடந்த சில வருடங்களாக இந்தியாவில் அண்ணா நகரில் வாழ்ந்து வருகின்றார். சமூகத்தின் மீதான முற்போக்கான பார்வைகளும், ஆக்கபூர்வமான சிந்தனைகளும், கொண்ட இவரின் முதல் வெளியீடு கரைக்கு வராத அலைகள் எனும் கவிதைத் தொகுப்பு! மிகவிரைவில் இன்னுமொரு படைப்பிற்கான வேலைகளுக்கிடையிலும், விம்பங்களிற்காக வாராந்தம் தனது நேரத்தில் ஒருபகுதியை ஒதுக்க முன் வந்துள்ள கவிஞருக்கு விம்பங்கள் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.!!!

இவ்விதழில் தலைமுறை பற்றிக் கூறுகின்றார் கவிஞர்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலங்கையை வட்டமிடும் கழுகுகள்

நீண்ட காலமாகவே இலங்கைத் தீவில், குறிப்பாக திருகோணமலையில் அமெரிக்காவுக்கு ஒரு கண் இருந்து வந்தது தெரிந்த விடயமே. இயற்கையாகவே பெரிய துறைமுகத்துடனும், புவியியல் ரீதியாக முக்கியமான கேந்திர மையமாக, பல நாடுகளையும் அவதானிக்கக் கூடிய வகையிலும், அமைந்திருக்கும் இலங்கைத் தீவினுள் சுநாமி மீட்புப் பணி எனும் போர்வையோடு நுழைந்து விட்டது அமெரிக்கா! போர்த் தளபாடங்களுடனும், கப்பல்கள், உலங்கு வானூர்திகளுடனும் வந்து சேர்ந்துள்ளனர் அமெரிக்க இராணுவ வீரர்கள்! செஞ்சிலுவைச் சங்கமோ, அல்லது பொது நலஅமைப்புக்களின் அங்கத்தினர்களோ அல்லாமல், மீட்புப்பணியில் இராணுவ வீரர்களுக்கு என்ன வேலை?? சுநாமியின் பேரில் உள்ளே நுழைவதற்கு முன்னரே அமெரிக்கா, இலங்கைத் தீவைத் தனது செயற்கைக் கோள்களின் மூலம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றதா எனும் கேள்விகள் எழுந்துள்ளன. 26.12.2004 அன்று சுநாமியின் போது அமெரிக்க செயற்கைக் கோளான quick bird எடுத்துள்ள புகைப்படங்கள் இச்சந்தேகத்திற்கு மேலும் வலுச்சேர்க்கின்றன!!!

இலங்கையின் களுத்துறைக்கடற்கரையில் சுநாமி தாக்கிய பொழுது கடல் உள்வாங்கிக் கொண்டதையும், பின் சுநாமி அலைகள் வேகமாக எழுவதையும் இச்செயற்கைக் கோள் நேரடியாகவே படம் பிடித்துள்ளது. இலங்கை தவிர வேறு எங்கும் சுநாமித் தாக்குதல் நேரடியாகப் படம் பிடிக்கப்படவில்லை என்பதுடன், இலங்கையில் கூட ஏன் களுத்துறைப் பகுதி விசேடமாகக் கவனிக்கப்பட்டது எனும் கேள்வி எழுகின்றது. இதற்குப் பதில் தேடும் போது முக்கியமான இன்னும் ஒரு பிரச்சனையை நாம் பார்க்கலாம்.

**நாம் ஈராக்கைக் கைப்பற்றிய பின் உலகம் அமைதியாயிருக்கிறது!!!**

**உலகில் இனிமேல் பயங்கர வாதம் எனும் சொல்லிற்கே இனி இடமில்லை!!!**

**அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஸ்**





www.tamilarangam.net

## அரசியல் பார்வை

இந்தியாவுடன் இலங்கை சில ஒப்பந்தங்களைச் செய்யமுற்பட்டிருப்பதும், குறிப்பாக இலங்கையின் குறிப்பிட்ட சில விமானநிலையங்களை இந்தியா பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான ஒப்பந்தம் குறித்த பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதும் ஒன்று. தவிர 16.12.2004 தொடங்கிச் சில நாட்கள், இந்தியக்கடற்படை இலங்கைக் கடற்படைக்கு, இலங்கையின் மேற்குப் பகுதிக் கடலில் பயிற்சி அளித்ததும், நீண்ட நெடுங்காலமாக அமெரிக்காவின் இத்தகைய முயற்சிகளை இந்தியா எதிர்த்து வருவதும், அமெரிக்காவுக்குக் கவலையுடன் அச்சத்தையும் ஏற்படுத்துவதாக இருந்திருக்கலாம். இந்திய இலங்கை உறவுகள் மேம்பட்டால், அமெரிக்கா தனது இலக்கை அடைவது மிக கடினம். ஆகவே இலங்கை-இந்திய உறவை மிக அவதானமாகக் கவனித்துக் கையாண்டால்தான், தனது இலக்கிற்கான காய் நகர்த்தலுக்கு இலகுவாக இருக்கும் எனும் நிலையில், இலங்கை, அமெரிக்கச் செயற்கைக்கோளின் பார்வையிலேயே இருக்கிறது எனக் கொள்ளலாம். (தற்போது சுநாமியால் பாதிக்கப்பட்ட பல கடற்படைத் தளங்களை புனரமைப்பதற்கு, இந்தியா உதவ முன் வந்திருப்பதையும் குறிப்பிட வேண்டும்)



இன்னும் சொல்லப்போனால், அமெரிக்கா, ஈராக்கின் மீது தாக்குதலை நடாத்துவதற்கு, ஈராக்கிடம் இராசாயன உயிர்கொல்லிஆயுதங்கள் (Bio-chemical weapons) இருப்பதே காரணமாகக் கூறப்பட்டது. இருந்தவை ஏற்கனவே அழிக்கப்பட்டு விட்டன எனும் ஈராக்கின் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாமலும், அதனை நிரூபிப்பதற்காக அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையால் அனுப்பப்பட்ட அங்கத்தினர்கள், ஈராக்கில் இராசாயன உயிர்கொல்லி ஆயுதங்கள் இருப்பதை நிரூபிக்க முடியாத நிலையிலும், ஈராக்கிடம் இராசாயன உயிர்கொல்லி ஆயுதங்கள் இருக்கின்றன என்ற தனது குற்றச்சாட்டையே முன் வைத்து ஈராக்கினுள் பலவந்தமாகப் புகுந்தது அமெரிக்கா. அத்துடன் IKONOS - செயற்கைக்கோள் எடுத்த புகைப்படங்களின் உதவியுடனேயே, ஈராக் நாட்டினுள் பல பகுதிகளிலும், குறிப்பாக kirkuk என்னுமிடத்திற்கும், அமெரிக்க இராணுவத்துருப்புக்கள் முன்னேறுவதற்கான பாதைகளையும் வியூகங்களையும் அமெரிக்கா அமைத்துக் கொடுத்தது. எண்ணை வளம்மிக்க ஈராக்கை நாசப்படுத்தி, ஈராக்கை தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, தம் இராணுவத்தை நிலைநிறுத்தி, சதாமையும் கைது செய்து நீண்ட நாட்கள் ஆகியும் இன்றுவரை அமெரிக்காவால் தனது குற்றச்சாட்டை நிருபிக்க முடியவில்லை.

அமெரிக்காவின் இச்செய்கை, ஈராக்கில் உலக அழிவுக்கான இராசாயன உயிர்கொல்லி ஆயுதங்கள் இல்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டபின்னர்தான், அமெரிக்கா அங்கு படையெடுப்பைத் தொடர்ந்ததோ எனும் சந்தேகத்தையும் வலுவாக ஏற்படுத்துகிறது. ஆக ஏற்கனவே பலநாடுகளில் தனது வல்லாதிக்க ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்தியிருக்கும் அமெரிக்காவின் கழுகுப் பார்வையில் இப்பொழுது சிக்கியிருப்பது எம் இலங்கைத் தீவு.

உதவிப்பணிகளின் சாயம் பூசி சுநாமியால் பாதிக்கப்பட்டவருக்கு உதவ வந்திருக்கும் அமெரிக்காவுடன் ஆரம்பத்தில், பிரிட்டனுடன் இந்தியாவும் சேர்ந்திருந்தாலும், அமெரிக்கா இலங்கையைக் குறி வைத்தபோது அதன் உள்நோக்கத்தை தாமதமாக புரிந்துகொண்ட இந்தியா, இக்கூட்டணியிலிருந்து பின்வாங்கத் தொடங்கியதாகவும் தெரியவருகிறது. இது இப்படியிருக்க, எதிரிக்கு எதிரி நண்பன் எனும் கதையாக அமெரிக்காவின் பொருளுதவிக்காக அதன் வலையில் விழுந்து, வாலைப்பிடித்துக் கொண்டிருக்கும் பாகிஸ்தானும் தன் பங்கிற்கு போர்க்கப்பல்களை உதவிக்காக அனுப்பியுள்ளது. தனது பாட்டைப் பார்க்கவே திண்டாடும் பாகிஸ்தான் உண்மையிலேயே மனமுவந்து இலங்கைக்கு இரண்டு கப்பல்களை அனுப்பியிருந்தாலும், இன்றைய நிலையில் இதில் அமெரிக்காவின் பின்னணித்தூண்டுதல் உள்ளது என்றே எண்ணத்தோன்றுகிறது. அமெரிக்கா ஈராக்கைத் தாக்கிய போது இணைந்து கொண்ட பிரிட்டன் இப்பொழுதும் இணைந்துள்ளது.

தமிழர்களுக்கு உதவிக்கரம் நீட்டவேண்டிய இந்தியா கூட சிங்களக் கடற்படைக்குத் தான் பயிற்சியளிக்கின்றது. எது எப்படியோ, அன்றைய இந்திய அமைதிப்படையைத் தொடர்ந்து, இன்று சுநாமியின் பெயரில் இன்னுமொரு வல்லாதிக்க இராணுவம் எமது மண்ணை மிதித்துள்ளது. என்ன நடக்கப்போகின்றது என்பதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

இலங்கைக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகள் குவிந்தாலும், தமிழர்களுக்கான நிவாரண உதவிகள் எதுவும் போய்ச் சேராத நிலையில், புலம் பெயர்ந்த தமிழர்களே தாயகமக்களின் கண்ணீர் துடைக்கக் கரம் கோர்த்தனர். எமக்கு எதிரிகள் அதிகமாகிக் கொண்டு போகும் இவ்வேளையில் தமிழர்களாகிய நாம், எமக்குள் பலப்பட வேண்டிய அவசியத்தை உணரவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

நன்றி: (படங்கள்) Digital globe, Space image
தகவல் தொகுப்பு: சகாமீ

**அமெரிக்க இராணுவம் 2006 ம் ஆண்டு இறுதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் என தெரியவருகிறது!!!**

www.tamilarangam.net























www.tamilarangam.net























www.tamilarangam.net



இளந்தளிர்களுக்கான பகுதி இது!! 15 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர் தமது திறமைகளை எழுத்து, ஓவியம், கேலிச்சித்திரங்கள் மூலமாக இப்பகுதியில் வெளிப்படுத்தலாம். உங்கள் ஆக்கங்களை, உங்கள் புகைப்படத்துடன், பெயர், வயது, படிக்கும் வகுப்பு மற்றும் பொழுதுபோக்குகள் போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பிவையுங்கள்.






இப்படங்கள் அனைத்தும் பார்த்து வரைந்தவையே தவிர பிரதி எடுத்தவை அல்ல.

--இலட்சுமி பிரியா







இலட்சுமி பிரியா
5ஆம் வகுப்பு, பிரான்சு





www.tamilarangam.net



# கல்லறையிலும் காற்று வரும் .....

அந்த வரிகளை மீண்டும் படிக்கிறேன். எத்தனையாவது தடவை என்றே தெரியவில்லை....

"...........கடவுள் கண்ணத் திறந்திட்டார் தம்பி. தை பிறந்தால் வழி பிறக்கும் எண்டு சொல்லுறது, உன்ர அக்கா விசயத்தில சரியாத் தான் இருக்கு. இத்தின வருசமா ஏதேதோ சாட்டுக்களால தள்ளுப்பட்டுப் போன அக்காவின்ர கலியாணம், இப்பத்தான் ஒரு மாதிரியா ஒரு முடிவுக்கு வந்திருக்கு.

ஒவ்வொருக்காலும் தள்ளுப்பட்டுப் போகேக்க அவள் எப்பிடி மனமொடிஞ்சு போறாள் எண்டது உனக்கும் தெரியும் தானே! அவளின்ட சோடிப் பிள்ளையள் சிலது தங்கட பிள்ளையளுக்கு சாமத்திய வீடு கூட செய்து போட்டுதுகள். 36 வயதாயிட்டுது, இனி எனக்கு என்னத்துக்குக் கலியாணம் எண்டு அவளுக்கும் இப்ப விரக்தி வந்திட்டுது. இருந்தாலும் நடராசா அண்ணை, அவர் தான் தரகர், விடுறதாயில்ல.

நீயும் வெளிநாட்டில. நாளைக்கு எனக்கு ஏதாவது நடந்திட்டுது எண்டால், அவள் பிள்ளை பாவம். தனிச்சு தவிச்சுப் போகும். நடராசா அண்ணை எடுத்த முயற்சியள் வீணாகேல்ல தம்பி. ஒரு இடம் சரி வந்திருக்கு. 39 வயசு. இங்கபக்கத்தில தான், சொந்தமா தொழில் செய்யிறான். அவனும் தங்கச்சியவையளுக்கு கலியாணம் முடியுமட்டும் பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறான். அவையளுக்கும் கொக்காவைப் பிடிச்சுப் போச்சு. இவளும் சம்மதிச்சிட்டாள். தாய் தகப்பனும் நல்ல மாதிரியாத் தான் கதைச்சவையள்.

தை பிறந்த உடனே கலியாணத்தை வைச்சிடுவம் எண்டு பேசி முடிச்சிருக்கு. அவையள் எங்களிட்ட சீதனம் எண்டு ஒண்டும் பெரிசா எதிர்பார்க்கேல்ல. நீ வெளி நாடு போய் கொஞ்ச காலம் தான் எண்டாலும், ஏதோ அக்காவுக்குச் செய்ய வேண்டியதெல்லாம் செய்து போட்டாய். ஒரே ஒரு குறை தான் தம்பி. நீ பக்கத்தில இல்ல. அப்பா உயிரோட இல்ல. மற்றப்படி எல்லாம் சந்தோசமா நடக்குது. எனக்கு இப்பதான் மனம் கொஞ்சம் நிம்மதியாயிருக்கு"...

கண்களில் திரையிட்ட கண்ணீர் பார்வையை மங்கச்செய்கிறது....

"இன்னும் ஒரு மாசம் தான் இருக்கு. அக்காவை மாலையும் கழுத்துமாப் பாக்கப்போற சந்தோசத்தில எனக்கு தலை கால் தெரியல்ல தம்பி. கன காலத்துக்குப் பிறகு அக்காவும் சந்தோசமாயிருக்கிறாளடா. பெடியனின்ட படமும் அனுப்பியிருக்கிறன். உனக்கும் பிடிக்கும் எண்டு நினைக்கிறன். கடிதம் கிடைச்சதும் பதில் போடு. நேரத்துக்கு சாப்பிட்டு உடம்பை கவனமா பாத்துக் கொள்..................."

மேற் கொண்டு எதுவும் தெரியவில்லை. கண்ணை நிறைத்து நின்ற கண்ணீர் வேகமாக கடிதத்தின் மேலே விழுந்து தெறித்தது. கடிதத்தில் பாதி கண்ணீரிலேயே நனைந்திருந்தது. கடிதத்தை நெஞ்சோடு அணைத்த படி, கண்களை மூடி கட்டிலில் சாய்கின்றேன். அம்மா, அக்கா, புகைப்படத்தில் பார்த்த அத்தான் என எல்லோரும் மாறி மாறி கண்முன்னே தோன்றுவதும், மறைவதுமாய் இருக்க, நான் தாயகத்தில் இருந்து புறப்பட்ட போது அம்மா சொன்ன வார்த்தைகள் அருகிலே கேட்பது போல் இருக்கிறது.

"தம்பி வீட்டு நிலமையாலயும், நாட்டு நிலமையாலயும் உன்னப் பிரிய வேண்டிக் கிடக்குதடா. என்ர ராசா நீ வரும் மட்டும் நான் இந்த உசிரப் பிடிச்சுக் கொண்டு இருந்திடுவன். நீதான் எனக்கு கொள்ளி போடோணும். என்னயும் கொக்காவையும் மறந்திடாத அப்பு....."

என் முகத்தையும் தலையையும் தடவியபடி, என்னை அணைத்துக் கொண்டு அம்மா அழுதது மீண்டும் கண்முன் தோன்ற, பெரிதாக வாய் விட்டு அழுகின்றேன். அம்மா.............ஆ..... ஆ....

பக்கத்து அறையிலிருந்த என் அறைத்தோழன் கண்ணன் அறையினுள் நுழைகிறான்.

"என்னடாப்பா சந்திரன், இப்பிடியே ரெண்டு நாளா அழுது கொண்டிருந்து என்ன செய்யப் போறாய்".

தோளைப் பிடித்து உலுக்கியவன், ஆறுதலாக தலையைத் தன் பக்கம் திருப்புகின்றான்.

"டேய் எழும்படா மச்சான், நடந்தது நடந்திட்டுது, இனி இப்பிடியே அழுது கொண்டிருந்து என்ன செய்யிறது? இண்டைக்கு உன்ர அம்மா மட்டுமில்லையடா, செய்தி பாத்தனீ தானே, ஆயிரக்கணக்கில........ ம்........... யார் யாருக்கு ஆறுதல் சொல்லுறது!"

என்னை நிமிர்த்தி கட்டிலில் அமரச்செய்தான். "எழும்பி முகத்தைக் கழுவு. டீ போட்டுக் கொண்டு வாறன்".

நான் கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கொள்ள அவன் அறையை விட்டு வெளியேறுகின்றான். திரும்பவும் கடிதத்தைப் படிக்க முனைகின்றேன்.

"அவையளுக்கும் கொக்காவைப் பிடிச்சுப் போச்சு. இவளும் சம்மதிச்சிட்டாள்...... தை பிறந்த உடனே கலியாணத்தை வைச்சிடுவம் எண்டு பேசி முடிச்சிருக்கு........ ஒரே ஒரு குறை தான் தம்பி. நீ பக்கத்தில இல்ல. அப்பா உயிரோட இல்ல......... இன்னும் ஒரு மாசம் தான் இருக்கு..... கன காலத்துக்குப் பிறகு அக்காவும் சந்தோசமாயிருக்கிறாளடா........" கண்கள் குத்திட்டு நின்றன. "அக்காவும் சந்தோசமாயிருக்கிறாளடா"

அக்கா ..... அக்கா.... ஏனக்கா? ஏன்........... உனக்கு மட்டும் இப்பிடியொரு நிலமை?.

ஐயோ...... வாழவேண்டிய வயசில..... இவ்வளவு நாளும் வழி தெரியாம நிண்டியே.... இப்ப உனக்கு ஒரு வாழ்க்கை கிடைக்குதெண்டு நாங்க சந்தோசமா இருந்தமே....... ஐயோ அக்கா கடவுள் இல்லையா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்களுக்கு ஏன் இந்தச் சோதனை?

மனம் கடலலையை விட வேகமாக அடித்துக் கொண்டது. பலமாய் கத்தி அழ வேண்டும் போல், உடல் மனம் இரண்டும் ஏதோ ஓர் சொல்ல முடியாத வேதனையில் தவித்தது. உடனே அக்காவைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும், ஆறுதலாய் அரவணைத்துக் கொள்ள வேண்டும் என்று மனது கிடந்து தவித்தாலும், நான் இருக்கும் நிலையில் என்ன தான் செய்ய முடியும்.

அகதி மட்டை கூட இன்னும் கிடைக்காம, களவா தான் வேலை செய்யிறன் எண்டதையும், கடன் வாங்கித்தான் அக்காவுக்குச் செய்ய வேண்டியதெல்லாம் செஞ்சு முடிச்சன் எண்டதையும் அம்மாவுக்குக் கூட சொல்ல இல்லையே. இப்ப நான் என்ன தான் செய்யுறது? என்ன செய்யுறது பதிலில்லாமல் தொடர்ந்தன கேள்விகள். ஏதோ ஒரு சூனியத்தினுள் இருப்பது போல் இருந்தது.

"இந்தாடாப்பா டீயை குடி" - கண்ணனின் குரல் கேட்டுத் திரும்பினேன். "ம்.....ம்.... பிடி"

தேனீர் கோப்பையை கையில் திணித்தவன் குடிக்கும் வரை பொறுத்திருந்து கேட்டான்.

"ஏன்டா இண்டைக்கும் டெலிபோன் லைன் கிடைக்க இல்லையே"

இல்லை என்பதாய் தலையை ஆட்டுகிறேன்.

"ம்....எதுக்கும் விடாம அடிச்சுப் பாப்பம். எப்பிடியும் இண்டைக்கு கதைக்கலாம் எண்டு நினைக்கிறன்." சொன்னவனின் கையைப்பிடித்துக் கொண்டு மீண்டும் அழுகின்றேன்.

"என்னெண்டெடா கதைக்கிறது?..... நான் அவளுக்கு என்னத்தை சொல்லுறது?? எப்பிடி ஆறுதல் சொல்லுறது. அம்மா, தான் இருக்கேக்க அவளுக்கு ஏதாவது நல்லது செய்திடோனும் எண்டு இருந்தவ. இண்டைக்கு அம்மாவும் போய்ட்டா......அந்தப் பெடியனும் குடும்பத்தோட போய்ட்டான். ஐயோ...."

குரலெடுத்து அழுகின்றேன். கையைப்படித்துக் கொண்டிருந்த கண்ணன், மெதுவாக கையில் அழுத்தினான்.

"டேய் அழாதையடா. அழுதழுது என்ன செய்யப் போறாய்?" நிமிர்ந்து அவனைப் பார்க்கின்றேன்.

"நான் அம்மாவில,...... அக்காவில..... எவ்வளவு பாசம் எண்டது உனக்குத் தெரியும். இண்டைக்கு அம்மா செத்துப் போனா எண்டதைக் கூட என்னால தாங்கிக் கொள்ளக் கூடியதா இருக்கடா. ஆனா அம்மாவும் இல்லாம, பேசின பொடியனும் இல்லாம, பக்கத்தில நானும் இல்லாம, காயங்களோட ஆஸ்பத்திரியில இருந்து அக்கா படுற வேதனைய நினைக்கேக்க தான் நெஞ்சே வெடிச்சிடும் போல இருக்கடா..."

"என்னையும் அம்மாவையும் விட்டா அவளுக்கு யாரடா இருக்கினம்? அவளோட நான் எப்பிடியெடா கதைக்கிறது? அம்மா செத்தது மாத்திரம் தான்டா அக்காவுக்குத் தெரியும். மற்றத நான் எப்பிடியெடா அவளிட்ட சொல்லுறது"

கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு அழுகின்றேன். மூடிய கண்களுக்குள், எங்கோ ஒரு இருண்ட வெளியில், குவிந்து கிடக்கும் பிணங்களுக்கு நடுவில், உடைகள் எல்லாம் கலைந்து தலைவிரி கோலமாய் யாரையோ, எதுவையோ தேடிக் கொண்டு, பெருங்குரலெடுத்து அழுது கொண்டும், பலமாய் சிரித்துக் கொண்டும்அங்கும் இங்குமாய் ஓடித்திரிகின்றாள் என் அக்கா.!!! அக்கா மாத்திரம் இல்லை. இன்னும் நிறையப் பேர்...... இரைச்சலாய்..... அழுகையும் ஓலமுமாய் பல குரல்கள்.... எங்கோ தொலைவில் கேட்கிறது!

பக்கத்தில் டெலிபோன் அலறும் சத்தம் கேட்டு சுயநினைவுக்கு வருகின்றேன். கண்ணன் பிரெஞ்சில் பதில் சொல்லி டெலிபோனை வைத்து விட்டு என்னைப் பார்க்கிறான்.

"உன்ர முதலாளி தான், ரெண்டு நாளா வேலைக்கு வர இல்லையாம், விசா இல்லையெண்டு தெரிஞ்சு கொண்டு தான் உன்னை வேலைக்கு வைச்சிருக்கிறானாம், இண்டைக்கும் வர இல்லையெண்டால் இனிமேல் நீ வரத்தேவையில்லையாம். தான் வேற ஆள் எடுக்கிறானாம்..."

கோபமாய் சொன்ன கண்ணனிடம் "பிரச்சனையைச் சொன்னியாடா" என்று மெதுவாய் கேட்கின்றேன்.

"அத சொன்னதுக்குத்தான், அது எனக்கு விளங்குது, ஆனா எனக்கு என்ர வேலை முக்கியம் எண்டு சொல்லீட்டு டெலிபோனை வைச்சிட்டான்" இன்னும் கோபம் மாறாமலே கண்ணன் சொன்னான். சிறிது நேரம் இருவருமே பேசவில்லை. அமைதி பயங்கரமாய் இருந்தது.

"நாளைக்குக் காலயில நான் கட்டாயம் வருவன், அதுமட்டும் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளச் சொல்லி என்ர முதலாளிக்கு ஒருக்கா டெலிபோன் எடுத்துச் சொல்லிவிடடா" சொன்ன என்னை கண்ணன் ஒரு மாதிரியாகப்பார்த்தான். பின்பு சொன்னான்

"உண்மை தாண்டா. இந்தக் குட்டி அறையுக்குள்ள அடைபட்டுக் கொண்டு நடந்ததையே நினைச்சு அழுது கொண்டிருக்காமல், இனி நடக்க வேண்டியதை பாக்கத்தானே வேணும். அக்காவுக்குக் கூட இதோட வாழ்க்கை முடிஞ்சு போயிட இல்லை. கட்டாயம் நல்ல எதிர்காலம், வாழ்க்கை அமையும். நீ தைரியமா இருந்தாதான் அவவுக்கும் தெம்பாயிருக்கும்."

சொல்லிக் கொண்டே எழுந்து நடக்கின்றான். யன்னலால் உள்ளே வந்த சூரியக்கதிர்கள், அழுதழுது வீங்கிப் போயிருந்த கண்களில் பட்டபோது வேதனையாக இருந்தது. இருந்தாலும் சிரமப்பட்டுக் கண்களைத் திறந்து பார்க்கின்றேன்.

ஒவ்வொரு நாளையும் இரவு வந்து காவு கொண்டாலும், எப்படியோ நாளும் காலையில் சிரித்துக்கொண்டு வந்து விடுகிறது சூரியன்! எழுந்து யன்னலை நோக்கி நடக்கின்றேன்!!!

நிலா

www.tamilarangam.net



# துயரத்தில் ஓர் கவிதை

கண்கள் குளமாகி நெஞ்சம் தடுமாறித் துயரத்தில் ஓர் கவிதை
வஞ்சம் கொண்டகடல், வந்தெங்கள் ஊருக்குள் புகுந்த கதை
பொங்கி எழுந்து மலையெனத் திரண்டு வேகமாய் வந்த வெள்ளம்,
ஊரழித்து உயிர்குடித்து ஓய்ந்ததோ பெரு வெள்ளம்!
வண்ணக் கோலம் போட்டு வடிவாய் கட்டிய கூடுகள், வீடுகள்
வடிவிழந்து, இருந்த இடம் மறைந்து, இருள் நிறைந்து கிடக்கிறது.
உலகை உலுக்கிய அதிவேகக்கடல் அலை வந்தது,
உள்ளத்தை உருக்கிய மரணத்தின் சோக அலை வந்தது!
சிரிப்பிழந்து சின்ன மலரெல்லாம்சுகமிழந்தது
சிதறிய சொந்தங்கள் கதறிய ஓலம் வானைப்பிளந்தது.
ஒன்றாய்க் கூடி கடற்கரையில் விளையாடிய சொந்தம்,
ஒன்றாகி ஒருகுழியில் மண்ணுக்குள் புதைகின்றதோ?
உயிரிழந்த உடலெங்கும் கரை மிதந்ததாம்-
அடையாளம் காணாமற் கிடக்கின்றதாம்.
கண்டவர் கண்களில் கண்ணீர் பெரு வெள்ளம்.
நாளுக்கு நாள் உயிர்போன தொகை அங்கு கூடுதய்யோ!
நாங்கள் கை எடுத்த தெய்வங்களும் கண்மூடிப்போனதையோ!
கண்முன்னே பறித்தெடுத் கொடும் கடலே
ஆயிரமாயிரம் பலியெடுத்த பெருங்கடலே
உன்னிருப்பிடத்தில் இருக்கும்வரை உனக்கு மதிப்பு!
எம்மிருப்பிடம் நீ வந்ததனால் உன்மீதெமக்கு வெறுப்பு!
வீடு, மரம், புல், பூண்டுகள் வாரியெடுத்தப் போனாயோ?
உன்னருகில் இருந்தவரை உயிர்ப்பலிகள்எடுத்தாயோ?
உன் மடியில் தவழ்ந்தவரை எங்கே நீ தொலைத்தாயோ?
கொடுமைக்காரியடி, கடலம்மா நீ கொடுமைக்காரியடி.
அந்தோனியாரை வணங்கி படகெடுத்துப் போனோரைக்காணவில்லை,
அந்தோ கிடக்கிறதாம் சிலுவை கட்டிய அன்ரனியின் பூதவுடல்.
கட்டிப்பிடித்து உறங்கிய பிள்ளையை தட்டிப்பறித்துப் போனதாம் வங்கக்கடல்.
கண்ணீர் விட்டு கதறி அழுது கண்டுவிட்டாள் செத்தமகளைத் தென்னம் வட்டில்!
கல்லுக்குள் புதைந்து கிடக்கிறதாம் கந்தையாவின் கட்டுடல்.
நாளுக்கு நாள் இதுதானே காதில் விழும் உண்மைச் சேதி!
தினமிங்கு நாம் கேட்கும் அவலச்சேதி !
போருக்குள் நாம் கொடுத்த உயிர்ப்பலிகள் போதாது என்று நீ
ஊருக்குள் வந்து அள்ளிக் கொண்டு போனாய் பல உயிர்.
கடலம்மா நீ அள்ளி வந்துபோட்ட மீன் வளவுக்குள் செத்துக்கிடக்கு!
சத்தியமா யாரும் தொட்டதில்லையாம், செத்த மீன் பிடிப்பவர் நாங்களில்லை.
பிறந்த புது ஆண்டில், தொலைந்த ஆண்டின் துயரம்மனம் நிறைந்திருக்கு.
மெல்ல மெல்ல ஆறி எழுவோம் நாம் வாழ்வதற்கு!
வந்த ஆண்டில் வளமான வாழ்வு வந்து சேரட்டும்.
துயரத்தில் வீழ்ந்த உறவுக்குத் துணையாய் நாம் இருப்போம்.
அள்ளிக் கொடுத்து அவர் துன்பம் தீர்த்திடுவோம்!
ஆலயம் எங்கிலும் அவர் சுகம் வேண்டி நிற்போம்.
ஆறுதல் இல்லாதவர்க்கு ஆறுதலாய் நாமிருப்போம்.
கண்ணீரால் கவிதைகளால் அஞ்சலிகள் பாடி நிற்போம்.

மயிலையூர் இந்திரன்
பாரிஸ்



www.tamilarangam.net



# தலைமுறை

பொதுவாகவே சமூகங்களுக்குள் ஏற்படுகின்ற தாக்கங்கள், முரண்பாடுகளை வெளிக்கொணர்வதற்கென நடைபெறும் பகீரதப் பிரயத்தனங்களே கட்டுரைகளாக மிளிர்கின்றன.

சமூகங்களுக்குள் ஏற்படுகின்ற தாக்கங்கள் என்று நோக்குமிடத்து கல்வி, கலாச்சாரம், மொழி, வரலாறு, சமூக உரிமை என்பவற்றுடன், பண்பாடு முக்கிய பங்கு வகிக்கின்றது. வாழ்க்கை முறை மாற்றமும், பொருளாதாரத் தேவைகளும், வசதி வாய்ப்புக்களின்எதிர்பார்ப்புக்களும்புறத்தோற்ற நாகரீகத்தில்முன்னணியில் நிற்பது முக்கியம் என்பது போல்,ஐரோப்பிய நாகரீகத்துடன் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டு, பண்பாடு மறந்து வாழ்வது மனதைப் புண்பட வைக்கும் ஒரு செயலாகும்.

வளரும் சமுதாயத்தினராகிய எமது தலைமுறையினருக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டிய நாமே, தேவையற்ற வழிகளில்நம்மை நாமே வழி நடத்துவது, வளரும் சமுதாயத்தினருக்கு வடிகால்களாக அமைகிறது.

ஐரோப்பாவில் வாழுகின்ற எமது பிள்ளைகள்பாரம்பரிய சமூக, கலாச்சார பண்பாட்டு சூழலில் இருந்து மாறுபட்டவர்களாய், ஐரோப்பிய கலாச்சார சூழலின்ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாய் வாழத்தலைப்பட்டு விட்டார்கள்என்று அங்கலாய்த்துக் கொள்ளும்பெற்றோரோ, பாதுகாவலர்களோ அதற்கான சரியான காரணத்தைக் கண்டறிந்து, அதற்குரிய பரிகாரங்களைச் செய்வதாக இல்லை.

நல்ல பழக்க வழக்கங்கள் வீட்டில் இருந்து தான் ஆரம்பமாகின்றன என்றால் மறுப்பதற்கில்லை. வீட்டிற்கு வெளியே நல்லவர்களாக நடந்து கொள்ளும் பெற்றோர், தமது வீட்டிற்குள் மனிதத்தன்மை இல்லாமல் நடந்து கொள்வதைக் காண முடிகின்றது.

நானே எல்லாம், நான் சொன்னபடியே தான் எல்லாம்என்கின்ற நிலை மேலோங்கும் போது, வீட்டில் உள்ளவர்கள்மகிழ்ச்சியற்ற நிலைக்குத் தள்ளப்படும் போது, பிள்ளைகளின் விருத்திப்பண்புகள், தாக்கம் கண்டு, மறுக்கவும் எதிர்க்கவும் துணியும் நிலையை அடைகின்றனர். பெற்றோரிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பரஸ்பர அன்பு, ஒத்துழைப்பு, கருத்துப்பரிமாற்றம், ஏற்கும் இயல்பு போன்றவை கிடைக்காமல் போகும் போது, ஐரோப்பிய சூழலுக்கும் வெளித்தோற்ற நாகரீகத்திற்கும் அடிமைப்பட்டவர்களாய்இயந்திரத்தனமான வாழ்க்கை முறைக்கு தம்மைப்பழக்கப்படுத்திக் கொண்டு, மனித உணர்ச்சிகளை மதிக்க நேசிக்க மறுப்பவர்களாய், போதைப்பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், பயங்கரவாத மனப்போக்குடையவர்களாக வளர்ச்சி காண்கிறார்கள்.

தாயின் அரவணைப்பும், தந்தையின் வழிகாட்டலும் இல்லாத குழந்தைகளின் ஆளுமை பாதிப்படைகிறது. இதன் காரணமாகவே தான்ஆத்திரம், மிதமிஞ்சிய கோப உணர்வு, அதீத பயம், கவலை, தாழ்வுச்சிக்கல்ஆகியன மூர்க்கத் தனமான நடத்தைக் கோலங்களாக வெளிப்படுகின்றன.

தம்மைச்சுற்றியுள்ள வாழ்க்கை நிலமைகளை அறிந்து கொள்ளவும், வாய்ப்பு நிலமைகளை விஸ்தரிப்பதற்கும், தெளிவான சிந்தனையும், தீர்க்க தரிசனமும், முன்யோசனையும்உள்ள பெற்றோராய் நாம் எம்மைத்தயார்ப்படுத்திக் கொள்ளாத போது, பிள்ளைகளின் தவறான போக்கிற்கு நாமே காரணமென ஒப்புக் கொள்ள வேண்டும். ஒப்புக் கொண்டாகவே வேண்டும்.

புத்திசாலித்தனத்தால் யாரையும் ஈர்த்து விடலாம். ஆனால் பரிவாலும் பாசத்தாலும் எவரையும் சுவீகரித்துக் கொள்ளலாம். கெட்டிக்காரத்தனமான அணுகுமுறை பல மாறுதல்களை ஏற்படுத்தும். பக்குவமுள்ள தாய் தந்தையரிடமிருந்து பிள்ளைகள், பாசத்தையும், மரியாதையையும், ஒழுக்கத்தையும் பெற்றுக்கொள்ளலாம். பெற்றுக்கொள்கின்றார்கள்.

சில பெற்றோர்கள் பிள்ளைகளின் மனப்போக்கையும், விருப்பத்தையும், எதிர்பார்ப்புக்களையும் பொருட்படுத்தாமல்விடும் போது தான் பிரச்சனையே ஆரம்பமாகிறது.

மரபுகளுக்குட்பட்ட உறவுமுறை சிதைகிறது என்ற கவலை வேண்டாம்! மரபுகளுக்கு அப்பாற்பட்ட பண்பாடு குலையாத செயல் வேகத்துடன், விவேகத்துடன்புதிய யுகத்தில் புத்துயிர் பெற்று, பெற்றோர் பிள்ளைகள்உறவு வளர்ந்து வருவதைக் காணலாம்.

இந்தப் புதிய யுகத்தின் பிள்ளைகள் தான் உலகின் வித்தியாசமான இலக்கணம் படைப்பவர்களாகத் திகழ்வார்கள் என்று நம்பலாம். ஆகவே உணர்வுகள் மூலமாக உணர்ச்சிகளைக் கண்டறிந்து, பரஸ்பரம் விட்டுக்கொடுத்தல்மூலமாக மனித உணர்வுகளோடு ஒன்றுபட்டு, ஒரு அன்புப் பூங்காவாக, குடும்ப நெருக்கத்தோடு உணர்வுகளை வளர்த்து, எமது பாரம்பரிய பண்பாட்டு வழிகளில்வாழ்வோம்.

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு

யாழ்ப்பாணம் சி. இராசலிங்கம்
(இந்தியாவிலிருந்து)

www.tamilarangam.net



பெண்ணினமே! பெண்ணினமே!
உனக்கேன் இந்த நிலை?
பூவாய் பிறந்த பூவை நீ
புண்ணாகிப் போவதேன்?
பூமகளே நீ ஏன்
பொதி சுமக்க வேண்டும்?
பாவியவன் நிமிர்கையில்
குனிகின்றாய் நீ!!!

அவன் நடையில்உல்லாசம்!
உன் நடையில் தள்ளாட்டம்!

ஆண்களிடையே பெண்ணினமே,
தலை நிமிர்ந்து வாழ்ந்திடு!!
ஆண்களை ஆண்டவன்,
அனுபவிக்க மட்டும் படைக்கவில்லை! மாதரை
அடிமைப்படுத்தவும்படைக்கவில்லை!
அன்றாட வாழ்க்கையில்,
ஆண்களுக்குக்கிடைத்த துணை - நீ
வாழ்வது இது தான் முறையோ???

ஆண் பெண் வேற்றுமையை
அடியோடு அழித்திடு!!



அன்றாடம் அடுப்பங்கரையினில்
வெந்தது போதாதா?
அந்தியிலும் நீ வேலைக்காரியா?
இன்னும் உன் கைகள் ஓயவில்லையா?
பெண்களுக்கு சுகமே
இல்லையா - பெண்ணே
மண்ணில் உனக்கிது தான்
நியதியா??
நீதி சொல்ல உனக்கு யாருமே இல்லையா?

வேண்டாம்!!!
யாரும் வேண்டாம்!!
நீயே....
ஆதவனாய் எழுந்திடு!
அடிமைத்தளை களைந்திடு!
மௌனத்தைக் கொன்றிடு!
உனக்கென முகவரி அமைத்திடு!

இருளில்வாழும் மகளிர்க்கெல்லாம்
ஒளிப்பிழம்பாய் எழுந்திடு!
சமத்துவமே சத்தியமாய் கொள்ளும்
புதிய உலகம் படைத்திடு!!

உன் கஷ்டத்தில் திருப்தி காணும்
காட்டுமிராண்டிக்கணவன்- உன்
வாழ்க்கைக்குத் தேவை தானா?
வேண்டாம், விட்டு விடு!
தனியாக வாழ்விலே நீமுன்னேற முடியாதா?
வளர்த்திடு உன் திறமைகளை!
தயார்ப்படுத்து உன்னை நீ-
சுதந்திர வாழ்விற்காய்!!!!!!


-சாந்தி-

www.tamilarangam.net






அவுஸ்திரேலியாவின் பில்பாரா (Pilbara) விலிருந்து புறப்பட்டு மேற்குப் பகுதியைக்கடந்து ஹெட்லாண்ட் (Headland) துறைமுகத்திற்கு உலோகப் பொருட்களையும் தாதுப் பொருட்களையும் ஏற்றிச் செல்லும் இப்புகையிரத வண்டியே உலகத்திலேயே அதி நீளமான புகையிரதம். 82,000 தொன் பொருட்களை ஏற்றிச் செல்லும் இச்சரக்கு வண்டியின் நீளம் 7.4 கிலோ மீற்றர். இப்படியான சரக்கு சுமக்கும் புகையிரதங்களின் சராசரி நீளம் 2.5 கிலோ மீற்றர்களே! சாதாரணமாக நாம் பார்க்கும் புகையிரதங்கள் ஒரு இழுவை இயந்திரத்தின் உதவியுடனேயே ஓடித்திரிகின்றன. ஆனால் இவ்வண்டியை எட்டு இழுவை இயந்திரங்கள் இழுத்துச் செல்கின்றன. இதன் தலை தெரிகிறது, வால் தெரிகிறதா???? இப்புகையிரதம் நிறுத்து வதற்கான நிலையத்தை நீங்களே கற்பனை செய்து பாருங்கள்! நல்ல வேளையாக இது பயணிகள் புகையிரத மாக இல்லாததால் பரிசோதகர்களுக்குத் திண்டாட்டமில்லை.



உலகம் முழுவதிலும் வேலையிடங்களில் மாத்திரம் வருடாந்தம், சாதாரணமானதாகவோ அல்லது சாவை ஏற்படுத்தக் கூடியதாகவோ, 270 மில்லியன் விபத்துக்கள், இடம்பெறுவதாக கணிப்பிடப்பட்டுள்ளது. தொழில் இடங்களின் மாசடைந்த சூழல் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டும், விபத்துக்கள் காரணமாகவும் வருடாந்தம் 2 மில்லியன் பேர் பலியாகின்றனர். இவர்களில் 22 000 பேர் குழந்தைத் தொழிலாளர்கள் என்பது கொடுமை. பாரிய இயந்திரங்களினால் துண்டாடப்பட்டும், அவற்றின் கீழ் நசிந்தும், உயரங்களில் இருந்து விழுந்தும், நச்சு வாயுக்களாலும், நச்சுப் பொருட்கள் உடலில் சிறுகச்சிறுக ஏற்படுத்தும் மாற்றங்களாலும், இன்னும் பல காரணங்களாலும் இவ்விபத்துக்கள் ஏற்படுகின்றன. இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள உலகத் தொழிலாளர் சங்கத்தில் 130 நாடுகள் இணைந்துள்ளன. இச்சங்கம் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி வலியுறுத்துவதுடன், விபத்துக்களின் பின் சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் உதவுகிறது.

www.tamilarangam.net





படத்தில் உள்ள குழந்தையின் கருவில் என்ன விசேடம் என்கின்றீர்களா?

10 செ.மீ நீளமும், 45 கிராம் எடையும் உள்ள இக்கரு, தாயின் வயிற்றினுள் கருவறையில் உருவாகாமல், ஈரலினுள் உருவாகி 3 மாதம் வரை வளர்ந்துள்ளது!! ஆம்! கருப்பையினுள் இல்லாமல் கருப்பைக்குழாயினுள் குழந்தை வளர்வதை ஏற்கனவே நீங்கள் கேள்விப்பட்டு இருப்பீர்கள்! ஒரு பெண்ணின் உயிருக்கே ஆபத்தாக அமையக்கூடிய இந்நிகழ்வை ஆரம்பத்திலேயே மருத்துவர்கள் கண்டு பிடித்து, கருவை அழித்து விடுவார்கள். கவனமில்லாமல் விடும் பட்சத்தில், கருப்பைக்குழாய் வெடித்து விடும். இதன் போது பல வேளைகளில் தாய் உயிர் பிழைத்துக் கொண்டாலும், விந்தணுக்களை கருப்பை வரையில் காவிச் செல்லும் கருப்பைக்குழாய் சிதைந்து விடுவதால், பின்னர் கருத்தரிப்பதற்கான வாய்ப்புக்கள் குறைகின்றது. வயிற்றுப் பகுதியின் உள்ளே இருக்கும் அங்கங்களின் அசைவிலும் (உதாரணம்: குடல்), சமச்சீரற்ற சுவாச முறைகளாலும் மிகவும் அரிதாக, விந்தணுக்கள் கருப்பை நோக்கியல்லாமல் வேறு திசையில் பயணம் செய்து, இப்படி விந்தைகளைத் தோற்றுவிக்கின்றது என்கிறார்கள் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்! உலகத்தில் இதுவரை இப்படி 14 சம்பவங்களே அறியப்பட்டுள்ளன!

என்ன தான் நிறைவான மனிதனாக இருந்தாலும், நாம் எல்லோரும் ஒரு வித மனநோயாளிகளே! திடீரென மனதளவில் ஏற்படும் அழுத்தங்களால், மனதினில் ஏற்படும் மாற்றங்கள் ஒரு மனிதனை மனநோயாளியாக்கி விடுகிறது. பைத்தியம் என்று கருணையின்றிக் கூறப்படும் சொல்லைப் புரிந்து கொள்ளக் கூடிய அளவிலேயே பலர் மனநோயாளிகள் பட்டியலில் இணைக்கப்படுகின்றனர். அதாவது இடையிடையே சித்தம் தடுமாறினாலும், நடப்பவைகளைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையிலிருப்பவர்களே அவர்கள்!

மனிதனாக இருப்பது இலகுவல்ல, நான் பைத்தியமல்ல, எனக்கு நண்பர்களில்லை, மனதால் நான் கஷ்டங்களை அனுபவிக்கின்றேன் என்று தெளிவாக எழுதக் கூடிய ஒருவனை யாராவது புத்தி சுவாதீனமற்றவன் என்று மனநோயாளிகள் மருத்துவ மனையில் அடைத்து வைப்பார்களா? அடைத்து வைத்திருக்கின்றார்களே!! அதிலும் வேதனை என்னவென்றால், இவர்களின் முழுநாள் வாழ்வும், அதாவது காலைக்கடன் முதல், சாப்பாடு, படுக்கை வரை இவர்களின் வாழ்க்கை முழுவதும்சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் மூடிய அறையினுள்ளேயே நடைபெறுவதே!



ஆபிரிக்காவின் Sierra Leone நகரில், 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த மனநல(?) மருத்துவ மனையில் 50 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் ஆண்டுக்கணக்காக சங்கிலியில் பிணைக்கப்பட்ட நிலையிலேயே, மெத்தைகள் இல்லாத இரும்புக் கட்டில்களிலேயோ, அல்லது நிலத்திலேயோ தமது வாழ்வைக் கழிக்கின்றனர். மருத்துவர்களாலும் மருந்துகளாலும் கட்டுப்படுத்த முடியாத, அதிஉயர் மனச்சிதைவடைந்த சிலரையே, அதுவும் குறிப்பிட்ட நேரத்திற்கே சங்கிலியில் பிணைத்து வைக்க மனித உரிமைச்சட்டங்கள் அனுமதிக்கின்றது.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்த போரினால் சீரழிந்து போயுள்ள இந்நாட்டின் பெரும்பாலான மக்கள் நம்பிக்கையைத் தொலைத்த ஒரு மனோ நிலையிலேயே வாழ்வது குறிப்பிடத்தக்கது. நம்பிக்கை தான் வாழ்வின் ஆதாரம், மனதின் அத்திவாரம்! இந்த அத்திவாரம் ஆட்டம் காணுவதாலேயே எம்மில் பலரும் மனதின் சமநிலையிழந்து, நோயாளிகள் கணக்கில் சேர்கின்றோம். மருந்துகளால் மாத்திரமே குணப்படுத்தி விட முடியாத இந்த நிலையை, அன்பாலும் அரவணைப் பாலும் மாற்றி விடலாம் என்பது உறுதி!

தமிழ்நாட்டில் ஏர்வாடி எனுமிடத்தில் இதே நிலையில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட பல மனநோயாளிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த கீற்றுக் கொட்டகையில் ஏற்பட்ட தீ விபத்தினால் அவ்விடத்திலேயே அனைவரும் கருகிக் கரிக்கட்டைகளான பரிதாபச் சம்பவமொன்று 2002 ம் ஆண்டு ஏற்பட்டிருந்தது.

www.tamilarangam.net

## தேசியகீதம் - குறுகிய பார்வை



கீதாஞ்சலி எனும் அரிய கவிதைத் தொகுப்பை வெளியிட்ட இரவீந்திரநாத் தாகூர், 1913 ம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றதுடன் இந்திய மண்ணிலேயே முதன் முதலாக நோபல் பரிசு பெற்ற பெருமையையும் பெறுகின்றார். இவர் தனது 23 வது வயதில் இத்தகுதியைப் பெற்றிருந்தார். இவரால் எழுதப்பட்ட

**இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக்கணிக்கின்ற நீயே, எல்லோருடைய மனதிலும் ஆட்சி செய்கின்றாய்! நின்திருப்பெயர் பஞ்சாப்பையும், சிந்துவையும், குஜராத்தையும் மராத்தியையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்கத்தையும் உள்ளக்கிளர்ச்சி அடையச் செய்கிறது. நின்திருப்பெயர் விந்திய - இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கின்றது. யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது. இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.**

எனும் சாரத்தைக் கொண்டுள்ள, வங்காள மொழிக்கவிதை, இந்திய தேசிய கீதமாகப் பாடப்பட்டு வருகிறது. இக்கவிதை முதன் முதலில் 1911ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலேயே பாடப்பட்டது. பின்னர் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்ததற்குப் பின், 1950ம் ஆண்டு முதல் இப்பாடல் இந்தியநாட்டின் தேசிய கீதமாக அங்கீகரிக்கப்பட்டது.

ஜனகணமன என்று தொடங்கும் இந்திய நாட்டின் தேசிய கீதத்திலிருந்து, சிந்து எனும் சொல் அகற்றப்பட வேண்டும் என்று, பாரதீய ஜனதாக் கட்சியைச் (B.J.P.) சேர்ந்த ஒருவர் உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார். அதற்கு அவர் கூறும் காரணம், இன்று நம் நாட்டில் இல்லாத, பாகிஸ்தானுடைய பகுதியாகிய சிந்து எனும் மாநிலத்தை நாம் ஏன் எமது தேசிய கீதத்தில் பாடவேண்டும் என்பதே! 1947 ம் ஆண்டு இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்த பொழுது, சிந்து மாநிலம் பாகிஸ்தானுடன் சேர்ந்து கொண்டாலும், சிந்து நதி இரண்டு நாடுகளையும் இணைத்தே இன்றும் ஓடுகிறது!

இதற்கு முன் நாம் இந்தியாவைப்பற்றிப் பார்ப்போம்! இந்தியா என்ற சொல், சிந்து எனும் சொல்லில் இருந்து பிரிந்திருக்கின்றது. Sindu > Indu > Hindu. இந்த சிந்து எனும் சொல்லே பின்னர் மதத்தின் பெயராக மாறியது. உண்மையைச் சொல்லப் போனால், இந்துத்துவா (இந்தியா இந்துக்களுக்கு மாத்திரமே) கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பா.ஜா.க.வினரின் பிரச்சனை என்னவென்றால்,

இந்துவின் அடிப்படைச் சொல்லான சிந்து, இன்று இந்தியாவின் ஒரு அங்கமாக இல்லாதது மட்டுமல்லாது, இந்து மதமே இந்தியாவின் வெளிப்பகுதியிலிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவியது என்று வருங்கால வரலாற்று ஆய்வாளர்கள் கருதுவதற்கு அடிப்படையாக சிந்து என்ற சொல் இருந்துவிடக் கூடாதே என்பதும் முக்கிய காரணங்கள்.

மனிதர்களின் தோற்றத்தைப் பார்க்கும் போது, முதலில் மனிதன் இரவைக் கண்டு பயந்தான். பின் ஒளியைக் கொண்டு தனது வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டான். அதனால் தான் சூரியனை வழுங்கும் பழக்கம் வந்தது.

ஆப்கானிஸ்தானிலிருந்து சிந்துவெளியில் குடியேறிய மக்கள் தான், (சிந்துவெளி நாகரிகம்) இந்தியா முழுவதும் பரவி இருக்கின்றார்கள் எனும் வரலாற்றை நாம் சரித்திரத்தில் பார்க்கின்றோம். இப்படிக் குடியேறியவர்கள் நான்கு வகையாகப் பிரிந்து செயற்பட்டனர்.

சத்ரியன் - நாட்டை ஆள்பவன், வைசியன் - வியாபாரம் செய்பவன், சூத்திரன் - விவசாயம் செய்பவன்
பிராமணன் - பிரம்மத்தை அறிந்தவன் (பிரமம் என்பது படைப்பு!)

இப்படிப் பிரிந்த மக்கள் பின்னர் அவர்கள் செய்யும் தொழிலின் அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். ஆனால் இன்று இவர்கள் பல சாதிகளின் பெயர்களால் பிரிந்து நிற்கின்றார்கள்.



விஞ்ஞானம் படித்தவர்களும், மருத்துவர்களும் சாதியின் பெயரால் கட்சி நடாத்தும்
இன்றைய நிலையைத் தான் நாம் மாற்றியமைக்க வேண்டுமே தவிர,
தேசிய கீதத்தை அல்ல!!!

சயந்தன்

www.tamilarangam.net








**WHO:** Robert Pershing Wadlow

**WHEN:** Last measured on July 15, 1940

**WHERE:** Alton, Illinois, USA

**WHAT:** 272 cm (8 ft 11 in)

## உயர்ந்த (!!!) மனிதர்

உலகத்திலேயே உயரம் கூடிய மனிதனாக பதிவிலுள்ளவர், Robert Pershing Wadlow என்பவர் தான்! 1918 பெப்ரவரி 22 இல், அமெரிக்காவின் அல்ரன் நகரில் பிறந்த இவர், 1940 ம் ஆண்டு ஜூன் 27 ம் திகதியன்று அளவிட்ட போது, 2.72 மீற்றர் (8 அடி 11.1 அங்குலம்) உயரமாக இருந்தார். 1940 ஜுலை 15ல் இவர் இறந்தபோது இவரை 3.28 மீற்றர் (10 அடி 9 அங்குலம்) நீளமான பெட்டியில் வைத்து அடக்கம் செய்தனர். இன்று வரையில் இவரைவிட உயரமாக யாரும் வளர்ந்து உள்ளதாகப் பதிவில் இல்லை. இன்று உயிரோடு உள்ளவர்களில், 2 மீற்றர் 35.9 சென்ரிமீற்றர் (7அடி 8.9 அங்குலம்) உயரம் கொண்ட துனிசியா நாட்டைச் சேர்ந்த றாட்ஹுன் (Radhouane) என்பவரே உயரம் கூடிய மனிதனாக, கின்னஸ் உலக சாதனைகள் புத்தகத்தில், 1999 ஏப்பிரல் மாதத்தில் பதியப்பட்டிருக்கின்றார். ஆனாலும் சீனாவின் வுகன் (Whan) பகுதியில், 2004ம் ஆண்டு நவம்பரில், சாங் ஜுன்கை (Zhang Juncai) என்பவரின் உயரம் மக்களை மாத்திரமல்லாமல் பத்திரிகையாளர்களையும் கவர்ந்துள்ளது. சராசரியாக உயரம் குறைந்தவர் களாகவே காணப்படும் சீன மக்களிடையே, 2.47 மீற்றர் உயரம் கொண்டு, தரையில் காலும், மேகங் களுக்கிடையே தலையுமென நடக்கும் இவரை மக்கள் வியப்போடு பார்ப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தலைமுறை(டி) வேதனை

நாம் வாழும் இந்த உலகமே நிறைய விந்தைகளைக் கொண்டது. குணங்களில் மாத்திரமல்லாமல், படைப்பிலும் விசித்திரமான பல மனிதர்கள் வாழுகின்ற பூமி இது!

சர்க்கஸ்களில் வேடிக்கை காட்டும் வேலையைச் செய்து வரும் Larry எனப்படும் விக்டரும், Danny என்றழைக்கப்படும் காப்ரியலையுமே நீங்கள் படத்தில் காண்கின்றீர்கள்!! ஆனால் இவர்கள் சார்க்கஸ்"க்காக எந்த வேடமும் இடவில்லை. என்ன பார்க்கின்றீர்கள்? முடிகள் நிறைந்த முகமிரண்டு!!

என்ன நீங்கள் மிரண்டு விட்டீர்களா?? உருவம் தான் அப்பிடியே தவிர, சாதாரண மனிதர்களாகவே இவர்கள் இருக்கின்றார்கள், படிக்கின்றார்கள்.



ஆம்! மெக்ஸிக்கோ நாட்டில் வாழும் Ramos Gomez குடும்பம், கடந்த 5 தலைமுறைகளாகச் சந்தித்து வரும் பெரும் பிரச்சனையிது!! இன்று 19 நபர்களைக் கொண்ட இக்குடும்பத்தில், ஆண்கள் பெண்கள் எல்லோருமே உடலில் 98% முடியினால் மூடப்பட்டே உள்ளனர்.

சாதாரணமாக உடற்கூறுகளில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு ஹார்மோன்களே காரணமாக இருந் தாலும், கைகள், பாதங்கள், உதடுகள் தவிர்ந்த உடலின் ஏனைய பாகங்கள் முழுதும் பெண்களுக்குத் தடிமன் குறைந்தும், ஆண்களுக்குத் தடிமனாகவும் முடிகள் காணப்படும் இக்குடும்பம் பற்றி மருத்துவ ஆராய்ச்சி யாளர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உலகம் முழுவதிலுமிருந்து தங்கள் முடிப் பிரச்சனைக்கான தீர்வை யாராவது தர மாட்டார்களா எனும் எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றது இக்குடும்பம்! மற்றவர்கள் எங்களை வேற்றுக் கிரகவாசிகளைப் போல் பார்ப்பது எமக்குப் பிடிக்கவில்லை என்கின்றார்கள் Larry யும் Danny யும். எம்மவரில் பலருக்கு வழுக்கையாகி விட்டதே எனும் கவலை! அவர்களுக்கோ முளைத்துக் கொண்டேயிருக்கின்றதே எனும் கவலை!!!

## உலக (ெ)மகா குண்டுப்பையன்!!!

சராசரியாக ஒரு குழந்தை பிறக்கும் போது, 45 செ.மீ இல் இருந்து 55 செ.மீ நீளமும், அதன் நிறை 2.5 கி. கிராமில் இருந்து 3.5 கி.கிராமும் இருந்தால், அக்குழந்தை ஆரோக்கியமாக உள்ளதென்பதும் அதே நேரம் இந்த நிறையுடைய கருவைச் சுமந்த தாயின் உடல் நிலை யிலும் பெரியளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தாது என்பதும் மருத்துவர்களின் கணிப்பு.

3, 4 வயதாகும் போது இக்குழந்தை, கிட்டத்தட்ட 10 கி.கிராம் அளவு நிறையைப் பெறும். ஆனால் பிறக்கும் போதே 10.8 கி.கிராம் நிறையிலேயே ஒரு குழந்தை பிறந்தது என்றால் ஆச்சரியம் தானே! கனடாவைப் பிறப்பிடமாகக் கொண்ட, Anna Bates (தந்தை பெயர் Swan) எனும் 2.27 மீற்றர் (7 அடி 5.5 அங்குலம்) உயரமுடைய பெண், 19 தை 1879 இல் ஒரு குண்டுப்பையனை(!!!) பெற்றெடுத்தார். 10.8 கி.கிராம் (23 இறாத்தல் 12 அவுன்ஸ்) நிறையையும், 76 செ.மீ (30 அங்குலம்) நீளத்தையும் கொண்டிருந்த இக்குழந்தை, 11 மணிநேரமே வாழ்ந்த பின் இறந்து விட்டதுதான் சோகம். இருந்தாலும் இதுவரை இவ்வுலகில் பிறந்த குழந்தைகளில், நிறையும் நீளமும் கூடிய குழந்தையாக இதுவே அறியப்படுகின்றது.

இதை விட, 1955 ம் ஆண்டு புரட்டாசியில், இத்தாலி நாட்டில் சாதாரண உயரமுடைய ஒரு பெண்ணுக்கு 10.2 கி.கிராம் (22 இறாத்தல் 8 அவுன்ஸ்) நிறையையுடைய ஆண் குழந்தையும், பிரித்தானியாவில் 1852 ம் ஆண்டு நத்தார் தினத்தன்று 9.5 கி.கிராம் நிறையையுடைய குழந்தையும், 12 கார்த்திகை 1884ல் பிரித்தானியாவில், 33 வயதுடைய ஒரு ஆசிரியைக்கு, 9.13 கி.கிராம் நிறையையுடைய ஆண் குழந்தையும், 1992 ம் ஆண்டு பங்குனி 9ம் திகதி, பிரித்தானியாவில் 1.57 மீற்றரே (5 அடி 2 அங்குலம்) உயரமுடைய Nicole CARR எனும் பெண்ணுக்கு 7 கி.கிராம் நிறையும் 63 செ.மீ (25 அங்குலம்) நீளமும் கொண்ட குழந்தையும் பிறந்துள்ளனர்.

நீயாகவே முடிவு செய்! நீயாகவே செயற்படு! தோற்றுப்போ!! அதிலே ஒரு லாபம், யாரையும் குற்றவாளியாக்காதவன் என்ற பேர் உனக்குக் கிடைக்கும்.

ஒரு விஷயத்தில் பிறரது அங்கீகாரத்தை நீ எதிர்பார்த்தால், அது நீ முழு அறிவோடு சிந்தித்த விசயமல்ல என்று பொருள்.

மானிடம் என்ற தமிழ்ச்சொல் வடமொழிச் சொல்லின் மருவு தான். ஆனால் அதற்கொரு அர்த்தத்தை நான் கற்பிக்கிறேன். அதாவது அது அழகையும் மானத்தையும் மானிடம் வாங்குகிறது என்பது தான். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் குரங்கினம் என்றல்லவா அழைக்க வேண்டும்.

- கண்ணதாசன் செப்பு மொழிகள்

www.tamilarangam.net



# சொல்லுறதை சொல்லிப்போட்டன்...

"ஒரே சனநெரிசலாக் கிடக்குது, இதுக்குள்ள என்னத்தை யப்பா செய்யுறீர்? சாமி கும்பிடுறீர் போல தெரிய இல்லையே"

பக்கத்தில நிண்ட பொம்பிளையின்ட சாரியையும் நகையளையும் பாத்துக் கொண்டு நிண்ட என்ட மனிசியை நான் இடிச்ச இடியில திரும்பி என்ன பாத்து முறைச்சாள், என்ட தர்மபத்தினி!

"வாங்கித்தரத்தான் வக்கில்ல, பாக்கயும் கூடாதே? நீங்கள் எல்லாம் ஒரு புருசன்." புருசன் எண்டதை கொஞ்சம் அடிக்கிற மாதிரி சொன்னாள்.

"இங்க பாருங்கோ ஒவ்வொருத்தியும் எப்பிடி சீலையும் நகை நட்டுமா வந்திருக்கிறாளவ, நானும் தான் இருக்கிறன். இதுக்குப் பேசாம அம்மா அப்பாவோடேயே இருந்திருக் கலாம்" பல்லை கடிச்சுக்கொண்டு இவள் சொல்ல, பக்கத்தில நிண்ட பிள்ளை என்ன ஒரு மாதிரியாப் பாத்துச் சிரிச்சுது.

கல்யாணம் கட்டி முப்பது வருசமாச்சு, பேரப்பிள்ளை ஒண்டையும் பாத்தாச்சு இன்னும் என்னக் குத்திக் காட்டிறத மட்டும் நிப்பாட்ட இல்ல என்ட மனிசி இங்க வாறவையள் எல்லாரும் கும்பிட வருகினமோ இல்லை ஷோ காட்ட வரீனமோ தெரிய இல்ல. எல்லாப் பொம்பிளையளும் எண்டில்ல, கூடுதலானவை அம்மன் கணக்கா சரிகையும், கழுத்தே தெரியாத அளவுக்கு நகைக்கடைக்கு விளம்பரம் போல நகை நட்டுக்களோடயும் தான் வந்திருக்கினம்.

இவள் கேட்டதுக்காக கூட்டிக் கொண்டு வந்தது பிழையாப் போச்சு! நீயே போட்டு வா எண்டு அனுப்பீட்டு நான் நிம்மதியா இருந்து ஏதாவது எழுதியிருக்கலாம். பேசாமல் ஒரு பக்கமா போய் நிப்பம், கும்பிடுறது எண்டால் கும்பிடட்டும் இல்ல வாய் பாக்கிறது எண்டால் பாத்திட்டு வரட்டும் எண்டு றோட்டுக் கரையில ஒதுங்கி நிண்டன். கீழ கிடந்த தேங்காய்ச் சில்லு ஒண்டில கால வைச்சு விழப் பாத்தன். நல்ல வேளையா சமாளிச்சிட்டன்.

இப்ப நடமாடித் திரியேக்கயே இந்தக் கதையள கேக்க வேண்டியிருக்கு. இதில படுக்கையிலயும் கிடந்தா நாய் படாப் பாடு தான்.

"என்ன ஐயா ஒதுங்கி நிக்கிறியள்?" எண்டு கேட்டுக் கொண்டு வந்திச்சு ஒரு பெடி. சேட்டைக் கழட்டி இடுப்பில கட்டியிருந்துது. புலிப் பல்லு கோத்து, சின்னிவிரலின்ட அளவில சங்கிலி நெஞ்சில புரண்டு கொண்டு கிடந்தது. எனக்கு உடன எங்கட வீட்டுக்குப் பக்கத்து வீட்டில நிண்ட றெக்ஸ் தான் ஞாபகம் வந்திது.

நெத்தியில், நெஞ்சில பட்டையா வீபூதி, சந்தனம். கட்டியிருந்த வேட்டிக்குக் கீழ காற்சட்டையும் சப்பாத்தும் தெரியுது. வலது தோள்பட்டைய குலுக்கிக் கொண்டு, கைய உதறிக் கொண்டு வந்த அந்தப் பெடியை, யாரெண்டு யோசிச்சுப் பாத்தும் பிடிபட இல்ல.

கெட்டிக்காரப் பெடி. நான் யோசிச்சதைக் கண்டு பிடிச்சிட்டுது. "நான் தான் சீலன். அண்டைக்கு குணமண்ண வீட்டில கண்டிருப்பியள்."


இதழ் 1 • பிரதிபலிப்பு 1 • விலை 2€

## விம்பங்கள்

உண்மைகளின் பிரதிபலிப்பு மாத்திரமல்ல! பதிவும் கூட!

### ஆண்டுச் சந்தா விபரம்.....

**ஒவ்வொரு கிழமையும் விம்பங்கள் வார இதழ் உங்கள் இல்லம் தேடிவரும்!!**

**பெயர்:** ........................................................................................

**முகவரி:** ........................................................................................

........................................................................................

........................................................ **தொலைபேசி:** ..........................................

**விம்பங்கள் வார இதழுக்கு ஆண்டுச் சந்தாவாக 100 யூரோவை காசோலை மூலம் அளிக்க விரும்புகிறேன்.**

**காசோலை எண்:** ........................................................ **திகதி:** ..............................

**வங்கி:** ........................................................ **கையொப்பம்:** ..............................

**படிவத்தை தெளிவாக பூர்த்தி செய்து... காசோலையுடன் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**
**HUMAN ENERGY, 29 BOULEVARD EDOUARD VAILLANT, 93300 AUBERVILLIERS, FRANCE**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஞாபகம் வந்திட்டுது. "ஓமப்பு, வயசு போட்டுது தானே, அது தான் மறந்து போச்சு. கையில என்ன நடந்தது? எங்கேயும் அடி கிடி பட்டுட்டுதோ.........?"

"இல்ல ஐயா தேங்காய் உடைச்சனானெல்லோ, அது தான் நோகுது" எண்டான்.

"என்ன தம்பி ஒரு தேங்காய் உடைச்சதுக்கு கை இப்பிடி நோகுதே, ஊரில நாங்க எவ்வளவு வேலயளச் செய்தனாங்க. இப்ப பிள்ளையளுக்கு உடம்பு வளைய நிமிர கஸ்டமா தான் இருக்கு...."

என்ன ஒரு மாதிரியாப் பாத்திட்டு, "யார் சொன்னது ஒரு தேங்காய் எண்டு, நான் மாத்திரம் எப்பிடியும் ஒரு நூறு நூற்றியம்பது தேங்காய் எண்டாலும் உடைச்சிருப்பன்" பெருமையாச் சொல்லிச்சுது பெடி.

"என்ன தம்பி நூறு தேங்காயோ....???" நான் கேட்டது அவனுக்கு ஏதோ விசித்திரமாய் இருந்திருக்கு.

"இந்தத் தேரோட தானே நீங்களும் வாறியள்? அப்ப வழிவழிய கடையளுக்கு முன்னுக்கு குவிஞ்சு கிடந்த தேங்காயில நீங்க ஒண்டு கூட உடைக்கேல்லையே!! வேஸ்ட், வேஸ்ட்" எண்டுது பொடி.

"இந்த வருசம் தான் முதல் தரம் வாறியளோ தேருக்கு??" என்னைக் கேட்டிட்டு, நான் பதில் சொல்ல முதலே

"இந்தத் தேர் திருவிழா இப்ப நாலைஞ்சு வருசமா நடக்குது, ஊரில நேத்தி வைச்சு தேங்காய் உடைகிற மாதிரிதான். அங்க இருந்த கஸ்டத்துக்கு ஒரு தேங்காவோட சரி. இங்க எங்கட நிலமை வேறதானே!" அந்தப்பெடியிண்ட கழுத்தில கிடந்த சங்கிலியில அவன்ட கை தானாவே தடவிக் கொள்ளுது.

இப்ப தான் கவனிச்சன், கையிலயும் வடம் மாதிரி ஒரு சங்கிலி, மூண்டு விரலிலேயும் பெரிய மோதிரம், ஒரு விரலில ரெண்டு மோதிரம்!!

அவையவை தங்கட வசதிக்கு ஏற்ற மாதிரி நூறோ இருநூறோ தேங்கா வாங்கி கடை வாசலிலயோ றோட்டுக் கரையிலேயோ வைச்சிடுவினம். பிறகென்ன பெடியளுக்குக் கொண்டாட்டம்தானே! போட்டிக்கு உடைக்க வேண்டியது தான்!

"நாங்க தேங்கா உடைக்கிறத பாக்கிறதுக்கெண்டே கொஞ்சப் பெட்டையள் வருவாளவ. அவளவ பாக்கிறதை பாக்கேக்க எங்களுக்கு தானாவே ஒரு குஷி வந்திடும். ஐயோ ஒரு பெட்டை டெலிபோன் நம்பர் தாறன் எண்டு கையால காட்டினவள். பக்கத்தில தாய் நிண்டுது. அது தான் இங்கால வரச்சொல்லி நானும் கையை காட்டிப் போட்டு வந்தனான். உங்களக் கண்டதில அது மறந்து போச்சு. நான் வாறன்........"

அதுக்குள்ள தேரும் சனங்களும் எங்களக் கடந்து போயிட்டுது. தம்பி எண்டு நான் கதை சொல்லத் தொடங்கினது அவனுக்குக் கேட்டிருக்காது. வேட்டியை கழட்டி சால்வையா போட்டுக் கொண்டு காச்சட்டையோட ஓடிப் போனான். சனத்துக்குக் கிட்டப் போன உடனே, திரும்பவும் வடிவா வேட்டியைக் கட்டீட்டு அப்பிடியே சனத்துக்குள்ள இரண்டறக் கலந்திட்டுது பெடி.

சனங்கள் போய் முடியத்தான் றோட்டைப் பாத்தன்.

## உங்கள் கருத்துக்கள்.....

www.tamilarangam.net

நேற்றைக்கு நான் வந்த றோட்டுத்தானே இது? பாக்கிற இடமெல்லாம் தேங்காய்ச் சில்லுகள் சிதறிப்போய்க்கிடக்கு. ஏதோ குண்டு வைச்ச இடம் மாதிரி. பாத்துக் கொண்டிருக்க குப்பை அள்ளுற லொறி வந்து அப்பிடியே எல்லாத்தையும் கூட்டியள்ளிப் போக இடம் பளிச்!

ஆனா மனசில மட்டும் பாரம் கூடிட்டுது. கோயிலுக்குப் போய் கும்பிட்டா மனப்பாரம் குறையும் எண்டு சொல்லித்தான் சின்ன வயசில அப்பாத்தா என்னக் கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போறவ. ம்! அது ஒரு காலம்! இனி எங்க அதையெல்லாம் பாக்கிறது. இந்தக்கட்டை இங்கேயே வேக வேண்டியதுதான்.

அவவை நினைச்ச உடனே ஊர் ஞாபகம் வந்திட்டுது. இண்டைக்கு அங்க எங்கட ஆக்கள் படுற கஷ்டங்கள், தாய் தகப்பன் இல்லாம பிஞ்சுகள் ஒரு நேர சோத்துக்குப் படுற பாடு, பழசோ பத்தையோ உடுத்திக் கொண்டு, கஞ்சியோ கூழோ குடிச்சுக் கொண்டு அதுகள் படுற வேதனையளப் பற்றி இங்க உள்ளதுகள் கொஞ்ச மெண்டாலும் யோசிச்சா, இப்பிடியெல்லாம் வீணா அழிச் சாட்டியம் செய்யாதுகள். இதக் கேக்கப் போனா, ஊரிலயும் உடைக்கிறம்தானே எண்ட கேள்வியோட, நாங்க என்ன உம்மட காசிலேயே உடைக்கிறம் எண்டு என்னத்தான் ஒரு மாதிரியாப் பாக்குதுகள்!

யாரைச் சொல்லி யாரை நோகிறது. ஊரில கோயிலில உடைக்கிற தேங்காயள, சின்னப்பெடியனா இருக்கேக்க நாங்களே அடிபட்டு எடுத்துச் சாப்பிட்டிடுவம். அப்பிடி ஒருக்கா நான் சாப்பிட்டுக் கொண்டிருந்ததை ஒரு காகம் பறிக்க வந்துதான் இண்டைக்கும் எண்ட முகத்தில கீறுப்பட்ட அடையாளம் கிடக்குது.

அதை விடுங்கோ. மற்றப்படி விசேச நாளில நியைறத் தேங்கா உடைபட்டா, அதை அப்பிடியே அள்ளி தேங்காச் சொட்டை கொப்பறையில போட்டு எண்ணெயாக்கி போடுவினம். பிறகு விளக்குக் கொழுத்தவோ வடை சுடவோ அது பிரயோசனமா போகும். அதே மாதிரி தேங்காச் சிரட்டையையும் அடுப்பெரிக்கிறதுக்குப் பாவிச்சுப் போடுவீனம். எப்பிடியோ ஒரு வழியில பிரயோசனமாப் போகும்.

இஞ்சை என்னடா எண்டால், கவுமெந்துக்கு காசகட்டி றோட்டை மறிச்சு, வரியைக்கட்டி தேங்காய இங்க கொண்டாந்து, இந்த வருசம் தேர் திருவிழாவில 3 000 தேங்காய்க்கு மேல உடைச்சம் எண்டு பெருமை பேசிக் கொண்டு, உடைச்சு பிறகு அதை வீணா அள்ளிக் குப்பையில போடுறதுக்கும் இலச்சக்கணக்கில மாநகரசபைக்குக் காசகட்டி, வீணடிக்கிறாங்கள்.


இங்க வெளிநாடுகளில பக்தி எண்ட பேரில, கோயிலக்கட்டிப் போட்டு, நிறைய இடத்தில பகட்டும் பாவங்களும் தான் நடக்குது. சனமும் கும்பிடப் போறது பாதி, கொக்கி போடப் போறது பாதி எண்டு தான் கோயிலுக்குப் போகுதுகள். இங்க சில ஐயர்மாரோட விளையாட்டச் சொன்னா நீங்களே கல்லால அவையள அடிச்சப் போடுவியள்.

ஐயோ எண்ட தர்மபத்தினி காளியாத்தாவை விட மோசமா இங்க தான் வர்றாள். எதுக்கும் அடுத்த முறை சந்திக்கேக்க இந்த ஐயர்மாரிண்ட வண்டவாளங்களைப் பற்றிச் சொல்லுறன். இப்ப நான் போட்டு வாறன் பிள்ளையள். எதுக்கும் நான் சொன்ன விசயங்களைக் கொஞ்சம் யோசியுங்கோடா!!!

காலக்கிறுக்கன்

## அமெரிக்காவின் இரண்டாவது செயற்கைக் கோள் Quick Bird

10 மீற்றர் உயரமும், 3.04 மீற்றர் அகலமும், 2100 இறாத்தல் நிறையையுமுடைய இச்செயற்கைக்கோள், 2001 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18 ந் திகதி விண் வெளிக்கு ஏவப்பட்டது. இதன் ஆயுள் ஏழு ஆண்டுகள் மாத்திரமே! kodak, Fokker



space ஆகிய நிறுவனங்களின் உதவியுடன், Ball aerobase and technologie corp. எனும் நிறுவனம், கலிபோர்னியாவிலுள்ள SLC-2W, Vandenberg, எனும் விமானப்படைத் தளத்திலிருந்து ஏவப்பட்ட இச்செயற்கைக் கோள் எடுத்தனுப்பும் புகைப்படங்களே உலகில் இன்று வரை மிகவும் தரம் உயர்ந்தவையாக (மற்ற செயற்கைக் கோள்களின் தரத்தைவிட) கருதப்படுகின்றது. 450 Km உயரத்தில் இருந்து பூமியை வட்டமிட்டுக் கொண்டிருக்கும் இச்செயற்கைக்கோள் தனது வட்டப்பாதையில் பூமியைச் சுற்றி வர எடுத்துக்கொள்ளும் நேரம் 93.5 நிமிடங்கள். இதே தளத்திலிருந்து 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ம் திகதி IKONOS எனும் செயற்கைக்கோள் ஏவப்பட்டது.

## நிராசை

கவியெழுதும் ஆவலுடன்
காகிதத்தை மேசையின் மேல்
ஓவியமாய் எடுத்து வைத்து,
உட்கார்ந்தேன், தனியறையில்.

அணை திறந்த வெள்ளம் போல்
மணிமணியாய்க் கவியெழுத
பேனாவை உதறிவட்டுப்
பிள்ளையார் சுழியும் போட்டேன்.
கரமெனும் கை வழியே
கவிதை வந்து பாயுமென்று
உறங்காமல் கண் விழித்தேன்,
ஒரு வார்த்தை வரவில்லை!

கம்பனுக்குப் பின் பிறந்தும்
கவியெழுத முடியவில்லை,
பாரதிக்குப் பின் பிறந்தும்
பாட்டெழுத முடியவில்லை.

கன்னித்தமிழ் மொழியில்
கவியெழுதிச் சேவை செய்ய
எண்ணித்தான் முயற்சித்தேன்,
ஏமாற்றம் கண்டேன் நான்!!!

....நினா

www.tamilarangam.net

